# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 7 புதன்கிழமை (21-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:176



நூலகம் 21 MAY 2003 யாழ்ப்பாணம்


# ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று யாழ். செயலகம் முன்பாக மறியல்!

## சொந்த இடங்களில் மீள்குடியமர்வை வலியுறுத்தி

யாழ்ப்பாணம்,மே21

வலி.வடக்குப் பகுதிகளில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி யாழ். செயலகம் முன்பாக நேற்று ஆயிரக்கணக்கான மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால நணபகல் வரையில் செயலகப் பணிகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பித்திருந்தன. காலை 6.00 மணி முதலே மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்திருந்தனர்.

வலி.வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் இந்த மறியல் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. நண்பகல் 11.30 மணிவரையும் போராட்டம் நீடித்தது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வசிக்கும் பொதுமக்கள், அரச அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பட்டவர்களும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

செயலகத்தின் அனைத்து வாயில்களையும் மறித்தவாறு அமர்ந்திருந்த பொதுமக்கள் எவரையும் உள்ளே நுழைய அனுமதிக்கவில்லை. இதனால் செயலகத்தில் பணிக்கென வந்திருந்த ஊழியர்கள் நண்பகல் வரை வெளியே காத்திருந்தனர்.

மறியலில் ஈடுபட்ட மக்கள் பதாகைகளைத் தாங்கியபடி அரசுக்கு எதிரான கோஷங்களையும் எழுப்பினர்.

நண்பகல் 11.00 மணியளவில் செயலகம் முன்பாக பொதுக்கூட்டம் ஆரம்பமானது. அரச அதிபர் செ.பத்மநாதன் உட்பட பலர் உரையாற்றினர்.

வலி.வடக்கில் மீளக்குடியமர்வதில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இம்மாத இறுதிக்குள் ஒரு நல்ல தீர்வைப் பெற்றுத் தருமாறு அங்கு கூடியிருந்த மக்கள் அரச அதிபரிடம் வலியுறுத்தினர். இது விடயத்தில் பிரதமரிடம் இருந்து உரிய பதிலை விரைவில் பெற்றுத்தருவதாக அரச அதிபர் உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து மக்கள் போராட்டத்தை நிறுத்திக்கொண்டு அங்கிருந்து கலைந்து சென்றனர். நண்பகலுக்குப் பின்னர் செயலகத்தில் வழமையான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களின் சமாசத் தலைவர் எஸ்.கிளேனவுன், வலி.வடக்கில் மக்களை மீளக்குடியமர அரசு அனுமதி வழங்கும் வரை விடுதலைப்


(12ஆம் பக்கம் பார்க்க)


## திடீரெனக் கண்டி வீதியை மறித்தும் மக்கள் போராட்டம்

### இராணுவ வாகனங்கள் திருப்பப்பட்டன

யாழ்ப்பாணம்,மே21

யாழ்.செயலகம் முன்பாக நேற்றுக் காலை முதல் மறியற்போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் முற்பகல் 10.45 மணியளவில் கண்டிவீதியையும் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அச்சமயம் அவ்வீதி வழியாக வந்த இராணுவ வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன.

இதன் காரணமாக அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

காலை முதல் யாழ்.செயலகத்தற்கு முன்பாக வீதியோரமாக அமர்ந்திருந்து மறியற்போராட்டத்தில் ஈடுட்டு வந்த மக்கள், ஆவேசமடைந்து 10.45 மணியளவில் கண்டி வீதிக்குக் குறுக்காக நின்று மறியலில் ஈடுபட்டனர்.

மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பாடசாலை மாணவர்கள் வீதிக்குக் குறுக்காக தமது கைகளைப்


(12ஆம் பக்கம் பார்க்க)


# அரசின் புதிய யோசனைக்கு புலிகள் தரப்பு பதில் இன்று

## கண்காணிப்புக் குழுவுக்கு புதிய பேச்சாளர்

இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் உத்தியோக பூர்வ பேச்சாளராக அக்னஸ் பிரக டொய்ற்றர் அம்மையார் பொறுப்பேற்றுள்ளார். தாய்லாந்து நாட்டவரான இவர் ஊடகவியல் துறையோடு 23 வருடகால அனுபவம் உடையவர்.

இதுவரை காலமும் இப்பதவியில் இருந்த டியூட்டர் டொர்கில்யன் டோக்கியோவில் உள்ள ஐ.நா.பல்கலைக் கழகத்தில் கல்வியைத் தொடர்வதற்காகச் சென்றுள்ளார்.

## டோக்கியோ மாநாட்டில் புலிகள்?

புதுடில்லி,மே21

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அடுத்தமாத ஆரம்பத்தில் இடம்பெற உள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவார்கள் என இந்திய செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டன.

நோர்வே சமாதானக் குழு வட்டாரங்களை மேற்கோள்காட்டி நேற்றிரவு அந்தச் செய்தி நிறுவனங்கள் இந்தத் தகவலை வெளியிட்டன. எனினும், இந்தச் செய்தி விடுதலைப் புலிகள் தரப்பால் ஊர்ஜிதப் படுத்தப் படவில்லை.

(ம)

## உத்தியோகபூர்வ அறிவிப்பு நாளை

யாழ்ப்பாணம்,மே21

**சமாதான நடவடிக்கைகளில் தற்போது ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையை நீக்கும் விதத்திலும், உதவி வழங்கும் நாடுகளின் ஜப்பான் மாநாட்டில் புலிகளைப் பங்குபெறச் செய்யும் வகையிலும் அரசு புதிய சில திட்டங்களை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்திருக்கிறது. அந்தத் திட்டங்கள் தொடர்பாக புலிகளின் பதில் இன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

இந்தப் பதில் தொடர்பான விவரங்களை நாளை கிளிநொச்சியில் நடைபெறவிருக்கும் செய்தியாளர் மாநாட்டில் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உத்தியோக பூர்வமாக அறிவிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சு.ப. தமிழ்ச்செல்வன் நடத்தும் பத்திரிகையாளர் மாநாடு இன்று காலை


(12ஆம் பக்கம் பார்க்க)


## புங்குடுதீவில் இருந்து யாழ். நோக்கி பயணிகளுடன் வந்த மினிபஸ் குடைசாய்ந்ததில் இருவர் பலி!

புங்குடுதீவு,மே21

புங்குடுதீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிகளுடன் வந்த சிறியரக வான் வீதியை விட்டு விலகித் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியதில் பாடசாலை மாணவர் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்தனர்; சாரதி உட்பட பத்துப்பேர் காயமடைந்தனர்.

அல்லைப்பிட்டி இராணுவ காவலரணுக்குச் சமீபமாக நேற்றுக் காலை 9.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த விபத்துச் சம்பவத்தில் புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியால ஜி.சீ.ஈ சாதாரணதர வகுப்பு மாணவருமான தியாகராசா மயூரன் (வயது 15) அந்த இடத்திலேயே மரணமானார்.

அந்த வானின் நடத்துநரான எஸ்.சிவலிங்கம் (வயது25) யாழ். ஆஸ்பத்


(12ஆம் பக்கம் பார்க்க)


## 3 முஸ்லிம் அமைச்சர்கள், 2 எம்.பிக்கள் இன்றுமுதல் நாடாளுமன்றை பகிஷ்கரிப்பு!

கொழும்பு,மே21

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்ற குழுவைச் சேர்ந்த மூன்று அமைச்சர்களும், இரண்டு எம்.பிக்களும் இன்று முதல் மீண்டும் நாடாளுமன்றப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதிப்பதற்குத் தயாராகி வருகின்றனர். அவர்களுடன் தொடர்புடைய வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

முஸ்லிம்களின் விவகாரத்தை பிரதமர் ரணிலின் அரசு உரிய முறையில் கையாளத் தவறிவிட்டது என்று கருதும் இவர்கள், அதற்குத் தமது ஆட்ஷேபத்தையும், அதிருப்தியையும் தெரிவிக்கும் வகையில் இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதிப்பர் என்று கூறப்படுகின்றது.

அமைச்சர்களான ஏ.எல்.எம்.அதாவுல்லா, நூர்தீன் மசூர், மொகைதீன் அப்துல்காதர் மற்றும் எம்பிக்களான டாக்டர் ஹுசைத், அலீஸ் ஆகியோரே பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்குத் தயாராகி வருகின்றனர்.

இவர்களில் அலீஸ் எம்.பியைத் தவிர ஏனைய நால்வரும் நேற்று


(12ஆம் பக்கம் பார்க்க)


## 'பிக் அப்' மோதி குடும்பஸ்தர் பலி!

### முத்திரைச் சந்திப் பகுதியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,மே21

நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் 'பிக் அப்' வாகனம் ஒன்று மோதி சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் தலை பிளந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் அதே பகுதியைச் சேர்ந்த மோகன் என அழைக்கப்படும் பொன்னுத்துரை சிதம்பரநாதன் (வயது 48) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

நல்லூர் கூநல சேவைகள் அலுவலகம் அமைந்துள்ள ஒழுங்கையினுள் உள்ள 'கராஜி'னுள் இருந்து திருத்த வேலைகளை முடித்துக் கொண்டு புறப்பட்ட தொண்டு நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான 'பிக் அப்' வாகனம் ஒன்றும் சைக்கிளுமே


(12ஆம் பக்கம் பார்க்க)





இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கி 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு...

நிலையான வைப்புகளுக்கு 1.5% மேலதிக மாதாந்த வட்டியை வருடாந்தம் வழங்குகின்றது.

இன்றே அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதம் 9.7% வருடாந்த விளைவு வட்டி 10.1%

கௌரவ

மூத்த பிரஜைகளை கௌரவிக்கும் திட்டம்

NSB

உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

## குடிதண்ணீர், உணவு, உடைகள் சீரான விநியோகம் இன்னும் இல்லை

# வெள்ளத்தால் பாதிப்புற்றோர் உரிய நிவாரணமின்றி பேரவதி!

## வெளிநாடுகளில் இருந்து அவசர உதவிகளை பெற்றுக்கொள்வதில் அரசாங்கம் மும்முரம்

கொழும்பு,மே21

பெருவெள்ளத்தாலும் பலத்த மண்சரிவுகளினாலும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் தென் மாவட்டங்களின் பல்லாயிரக்கணக்கான அகதி மக்களுக்குப் போதியளவு அவசர நிவாரண உதவிகள் இன்னமும சென்றடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. உணவுப் பொருள்கள், குடிதண்ணீர், உடைகள் கிடைக்காது அம்மக்களில் பெரும்பாலானோர் அவதிப்படுகின்றனர்.

இதற்கிடையே, வெள்ளத்தால் எழுந்துள்ள பாரிய நிவாரணப் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான அவசர நடவடிக்கைகளில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. வெளிநாடுகளிலிருந்து அரசாங்கம் அவசர உதவிகளைக் கோரியிருப்பதோடு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க, பிரிட்டிஷ் தூதுவர்கள் உட்பட மேற்குநாட்டு ராஜதந்திரிகளை இந்த உதவிகள் தொடர்பாக சந்தித்து வருகின்றார்.

இதற்கிடையே, இரத்தினபுரி, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்கள் நேற்றும் தொடர்ந்து நீடித்தன.

இரத்தினபுரி நகரில் ஏற்பட்ட வெள்ளம் வடிந்திருக்கின்ற போதிலும அதனை அண்டிய பிரதேசங்கள் இன்னமும் வெள்ளத்திலேயே மூழ்கியிருக்கின்றன. காலி, மாத்தறை, களுத்துறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் இதே நிலைமையே நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ள அகதிகளுக்குப் போதிய நிவாரணப் பொருள்கள் கிடைக்கவில்லையென்பதோடு குடிதண்ணீரும் பெரும் பிரச்சினையாக உள்ளது. இதனால், நிவாரண உதவிகளை வழங்கும்பொழுது குடிதண்ணீரையும் வழங்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் செயலாளர்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

போதியளவு உணவுப் பொருள்கள் கிடைக்காததால் அவற்றை வெள்ள அகதிகள் மத்தியில் பங்கிடுகையில் பெரும் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கான பால்மா உணவுகளுக்கும பெரும் தட்டுப்பாடு இருந்து வருகிறது.

போதியளவு உணவுப் பொருள்கள் மாத்திரமன்றி உடைகள், போர்வைகள், சமையல் பாத்திரங்கள், கூரைத்தகடுகள் என்பனவும் தேவைப்படுகின்றன எனவும் மாவட்டச் செயலாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

வெள்ள அகதிகளானோரின் எண்ணிக்கை குறித்து இதுவரை திட்டவட்டமான புள்ளிவிவரங்களும் கிடைக்கவில்லை. நிவாரண உதவிகள் சென்றடைய தாமதம் ஏற்பட்டிருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும் என்று அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அதிகாரி அலுவலகப் பேச்சாளர் தெரிவித்திருக்கின்றார்.

இதனால், அகதிகளின் எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ள பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு தூதரக அதிகாரிகள் சென்றிருக்கின்றனர் எனவும் அவர் சொன்னார். எவ்வாறாயினும், அவசர நிவாரண உதவிகள் வழங்குவதை ஐ.நா.தூதரகம் ஏற்கனவே ஆரம்பித்திருக்கிறது.

இதற்கிடையே, காலி, நாகொட, பத்தேகம, ஆகிய பிரதேசங்களில் வெள்ளத்தின் மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதாக காலி மாவட்ட செயலாளர் தெரிவித்திருக்கிறார். இப்பிரதேசங்களில் மணித்தியாலத்துக்கு ஓர் அங்குலம் என்ற வீதத்தில் வெள்ளம் உயர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

காலி மாவட்டத்தில் இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 100 பேரைக் காணவில்லை என்று கூறப்படுகிறது. 40 ஆயிரம் குடும்பங்கள் வரை இடம்பெயர்ந்துள்ளன.

மாத்தறை நகரை அண்டிய பிரதேசங்கள் யாவும் தொடர்ந்து வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றன. களுத்துறை மாவட்டத்தில் வெள்ளம் வேகமாக வடிந்து வருகிறது.

(டி-3)

## வெள்ள அகதிகளுக்கு உதவி; வாகனங்களில் நேற்று சென்றது

யாழ்ப்பாணம்,மே21

தெற்கில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம்,மண்சரிவு என்பவற்றால கடுமையாகப் பாதிப்படைந்துள்ள மக்களுக்கு வழங்குவதற்கென ஒரு தொகுதி பொருள்கள் வாகன அணி மூலம் நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டன.

யாழ்ப்பாண மக்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களால் வழங்கப்பட்ட அத்தியாவசிய பொருள்களான அரிசி, சீனிபால்மா ஆகியனவும் உடுபுடவைகள் என்பனவும் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

இரத்தினபுரிப் பகுதியில் வெள்ள அனர்த்தம் மற்றும் மண் சரிவினால் பாதிப்படைந்துள்ள மக்களுக்கான உடனடி மனிதாபிமான பணிகளை வழங்கும் பொருட்டு யாழ்.மாவட்டப பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கைகளுக்கு யாழ்.மக்கள் மற்றும் வர்த்தகர்கள் உதவிகளை மனமுவந்து வழங்கினர்.

இங்கிருந்து எடுத்துச்செல்லப்படும் இந்த அத்தியாவசியப் பொருள்கள் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக வழங்கப்படவுள்ளன. அமைச்சர் பெ.சந்திரசேகரன் மூலம் இப்பொருள்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(ம-8-86)

## இரத்தினபுரி வெள்ள பாதிப்புக்களை ஜனாதிபதி நேரில் சென்று பார்த்தார்

கொழும்பு,மே21

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் மண் சரிவு அனர்த்தங்களையும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

மண்சரிவில் அள்ளுண்ட எலபாத்த கிராமத்துக்கும் ஜனாதிபதி விஜயம் செய்து அனர்த்தங்களைப் பார்வையிட்டார். வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் குறித்தும் ஜனாதிபதி, இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் மாலினி பிரேமரட்ணவிடம் கேட்டறிந்தார்.

சப்பிரகமுவ மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் முதலமைச்சர், மாவட்டச் செயலாளர் மற்றும் அரச அதிகாரிகளைச் சந்தித்த ஜனாதிபதி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களது உடனடித் தேவைகளையும் கேட்டறிந்தார்.

(ம-3)

## தென்பகுதி வெள்ள அனர்த்தத்தால் நாடாளுமன்றம் கூடும் நேரம் குறைப்பு

### நேற்று சபை அரை மணி நேரத்தில் கலைந்தது

நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை காரணமாக நாடாளுமன்றம் கூடும் நேரம் குறைக்கப்பட்டிருக்கின்றது. இதனால், நடாளுமன்றம் நேற்றுக் காலை அரைமணி நேரம் மட்டுமே கூடிக் கலைந்தது.

நேற்றுக் காலை கூடிய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. வெள்ள அகதிகளுக்கு உதவுவதற்கான நிவாரண நடவடிக்கைகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபடுவதற்காக சபை அலுவல்கள் நேரம் மட்டுப்படுத்தப்பட வேண்டுமென அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 10 மணிக்குக் கூடியது. சபாநாயகரின் அறிவித்தலை அடுத்து வாய்மூல வினாக்கள் எழுப்பப்பட்டன.

இதன்பின்னர் ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத்தலைவர் விமல் வீரவன்ஸ சபையில் விசேட அறிக்கையொன்றை விடுத்தார்.

இதையடுத்து சபை நாளை காலை 10 மணி வரை ஒத்திவைக்கப்படவேண்டுமென்று அமைச்சரும் சபை முதல்வருமான டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார பிரேரித்தார்.

## வெள்ள அகதிகள் நிவாரணத்துக்கு அமெரிக்கா 50 லட்சம் ரூபா உதவி

### மேலதிக உதவிகள் பற்றி பின்னர் ஆராயப்படும்

தென்னிலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு அவசர நிவாரண உதவிகளை வழங்குவதற்காக அமெரிக்கா 50 ஆயிரம் டொலர்களை (சுமார் 50 லட்சம் ரூபா) வழங்கியிருக்கிறது.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் இந்த உதவி குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அறிவித்திருக்கிறார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த முதலாவது உதவி வழங்கப்படுவதாகவும் இந்த வேளையில் இலங்கைக்கு உதவ அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் தூதுவர் தெரிவித்திருக்கிறார்.

வெளிநாட்டு பேரழிவு உதவிக்கான யு.எஸ்.எய்ட் அலுவலகத்தின் அதிகாரி ஒருவர் விரைவில் இலங்கை வருவார் எனவும் - அமெரிக்க அரசாங்கத்தின் மேலதிக உதவிகள் எவ்வாறு அமையவேண்டும் என்பது குறித்து அவர் ஆலோசனை வழங்குவார் எனவும் - அமெரிக்கத் தூதுவர் வில்ஸ் பிரதமரிடம் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இந்த நிதியை நிர்வகிக்கும் பாய்கள், படுக்கை விரிப்புகள், சமையல் பாத்திரங்கள், விளக்குகள், உடைகள் ஆகியவற்றைக் கொள்வனவுசெய்ய இந்த நிதி பயன்படும்.

(ம-3)

## இரு விமானங்களில் இந்தியா உதவிப் பொருள் அனுப்பியது

### வைத்தியர் குழுவும் வந்தது

கொழும்பு,மே21

வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அவசர உதவியாக மருந்துப்பொருள்களுடன் விசேட வைத்தியர் குழு ஒன்றை இந்திய அரசு நேற்று இலங்கைக்கு அனுப்பியுள்ளது.

இரு விமானங்கள் மூலம் உதவிப் பொருள்களும் வைத்தியர் குழுவும் இந்தியாவில் இருந்து நேற்று வந்து சேர்ந்தன.

பன்னிரண்டு வைத்தியர்கள் மற்றும் 50அதிகாரிகள் கொண்ட குழுவே இந்தியாவால் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுடன் பெருமளவிலான மருந்துப் பொருள்கள், கூடாரங்கள், 2ஆயிரத்து 500 படுக்கை விரிப்புக்கள், தொடர்பு சாதனங்கள், மின்பிறப்பாக்கிகள் ஆகியன விமான மூலம் அனுப்பப்பட்டுள்ளன என இந்திய தூதரகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் மற்றுமோர் இந்திய மீட்புக்குழுவினர் கப்பல்மூலம் நேற்று முன்தினம் இரவு காலித்துறைமுகத்தை வந்தடைந்தனர் என்றும் -

அவர்கள் உடனடியாக இரத்தினபுரி, களுத்துறை, மாத்தறை, காலி ஆகிய பகுதிகளில் மீட்புப்பணிகளை ஆரம்பித்தனர் என்றும் - அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-3)

## இடம்பெயர்ந்த யாழ்.முஸ்லிம்களும் உதவி

யாழ்ப்பாணம்,மே21

தென்பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இடம் பெயர்ந்த யாழ்.முஸ்லிம்கள் அமைப்பும் உதவிகளை வழங்கியுள்ளது.

முதற்கட்டமாக தென்பகுதிக்கு அனுப்பிவைப்பதற்கென ஒரு தொகுதி பால்மா பக்கெட்டுக்கள் நேற்று மாலை யாழ்.முஸ்லிம் பள்ளிவாசலில் வைத்து புலிகளின் யாழ்-நல்லூர் கோட்டப் பொறுப்பாளர் போசுஸ்ரனிடம் கையளிக்கப்பட்டது. தொடர்ந்து ஒரு தொகைப் பணம் மற்றும் பொருள் உதவிகளையும் இடம்பெயர்ந்த யாழ். முஸ்லிம் மக்கள் வழங்க உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## கொண்டவட்டவான் ராணுவ முகாமில் துப்பாக்கிச் சூடு!

அம்பாறை மாவட்டம் கொண்டவட்டவான் இராணுவ முகாமில் பயிற்சி பெறும் கே.ஏ.எஸ்.பெரேரா (வயது-20) துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளானார். அவர் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இராணுவ முகாமில் உயர் அதிகாரியொருவருடன் கதைத்துக் கொண்டிருந்தபோது முதுகின் பின்புறமாக இனந்தெரியாத ஒருவர் சுட்டு விட்டு தப்பியோடினார் என பொலீஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் இவர் தெரிவித்துள்ளார்.

பொலீஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புத்தளம் விபத்தில் ஒருவர் மரணம்!

புத்தளம் - கொழும்பு பிரதான பாதையில் 3ஆம் மைல்கல் அருகேயுள்ள முள்ளுவெளி என்னும் இடத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற வாகன விபத்தில் அஜித் குமார (வயது 30) என்பவர் மரணமானார்.

கொழும்பிலிருந்து புத்தளம் நகருக்குப் பொருள்களை ஏற்றி வந்த ஒரு லொறியில் அவர் மோதியதையடுத்து இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

லொறிச் சாரதி பொலீஸில் சரணடைந்துள்ளார். புத்தளம் நகர திடீர் விசாரணை அதிகாரி எம்.எச்.எம். சமீவு, மரணவிசாரணை நடத்தி விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார்.

## 'நிப்பொன்' புலமைப்பரிசில்

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்டு, ஸ்ரீ லங்கா நிப்பொன் கல்வி கலாசார நிலையத்தின் புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கு ஏப்ரல்,மே ஆகிய மாதங்களுக்குரிய கொடுப்பனவு வவுச்சர்கள் கடந்த 19ஆம் திகதி முதல் வழங்கப்படுகின்றன.

யாழ்.மத்திய கல்லூரியில் அமைந்துள்ள யாழ் நிலையம்-101இல் வவுச்சர்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அதன் இணைப்பாளர் க.இராசதுரை, அதிபர்கள், பொறுப்பாசிரியர்களைக்கேட்டுள்ளார். (ம-6)

## உயர்தரப் பரீட்சை நடைபெற்ற பாடசாலைகள் இன்று திறப்பு!

ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சை இடம்பெற்ற பாடசாலைகள் 2ஆம் தவணைக்காக இன்று மீண்டும் திறக்கப்படுவதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைக்குரிய பாடங்களுக்கு குறைந்த எண்ணிக்கையானவர்களே தோற்றுவதாகவும் -

பிறிதொரு தினத்தில் இந்தப் பரீட்சைகளை சிறிய மண்டபத்தில் நடத்த முடியும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை - இதுவரை நடந்த பரீட்சைகளின் விடைத்தாள்கள் இன்று கொழும்புக்கு எடுத்துச்செல்லப்படுவதாகவும் அவர் சொன்னார்.

(ம-3)

## நீதிமன்றம் தண்டனை விதித்த பிரபாவை வெளிநாட்டு ராஜதந்திரிகள் சந்திப்பது குற்றம்

### நாடாளுமன்றத்தில் பிரச்சினை எழுப்புகிறது ஜே.வி.பி.

இருநூறு வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட புலிகள் இயக்கத் தலைவரை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், ஜப்பான் விசேட தூதுவர் யசூசி அகாஷி உட்பட பலர் சந்தித்து பேச்சு நடத்தியது இலங்கை சட்டப்படி குற்றமாகும். உயர்நீதிமன்றம் இது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஜே.வி.பி.நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றத்தில் அறிக்கையொன்றை விடுத்துப் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

மத்திய வங்கி குண்டுத் தாக்குதல் வழக்கில் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு நீதிமன்றம் இருநூறு வருட சிறைத் தண்டனை விதித்தது. இலங்கையின் சட்டங்களுக்கமைய நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு நபரை வெளிநாட்டு ராஜதந்திரிகள் சந்திப்பது குற்றமாகும்.

பிரபாகரனை நோர்வே மற்றும் ஜப்பான் ராஜதந்திரிகள் சந்தித்திருப்பது இலங்கைச் சட்டங்களை குறைத்து மதிப்பிட்டு அவற்றை மதிக்கவில்லை என்றே கருதவேண்டியுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சரோ அல்லது வேறு அமைச்சர்களோ நோர்வே அல்லது வேறு நாடுகளுக்குச் சென்று இவ்வாறு நடந்து கொள்ள முடியுமா?

தற்போது புலிகள் கைவசம் இருக்கும் நிலப்பகுதி தனி நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டுவிட்டதா?

- இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

# ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஈராக் புனரமைப்புத் திட்டம்!

## அமெரிக்கா நேற்றுமுன்தினம் சமர்ப்பித்தது

நியூயோர்க்,மே21

போருக்குப் பின்னர் ஈராக்கை புனரமைப்பது குறித்து தனது திட்டவரைவை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா நேற்றுமுன்தினமிரவு சமர்ப்பித்தது. இத்திட்டவரைவு மீதான விவாதம் நேற்று இடம்பெற்றது. இதற்கான வாக்களிப்பு இன்று புதன்கிழமை நடைபெறுக்கூடும் என்று ஐ.நாவுக்கான அமெரிக்கத்தூதர் ஜோன் நெஹ்ரோபொன்ரே தெரிவித்தார்.

ஈராக் புனரமைப்பு தொடர்பான திட்டவரைவை அமெரிக்கா ஏற்கெனவே ஐ.நா.பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்திருந்தது. ஆனால், அதனை மற்றைய நாடுகள் கடுமையாக விமர்சித்திருந்தன. இதனையடுத்து அத்திட்டவரைவை மீளப்பெற்ற அமெரிக்கா அதனை மீள் பரிசீலனை செய்து மறுபடியும் சமர்ப்பித்துள்ளது.

புதிய திட்டவரைவில் ஈராக்கில் புதிய அரசு அமைப்பதில் ஐ.நாவின் பங்கை ஏற்றுக்கொண்டுள்ள அமெரிக்கா முதற்றடவையாக ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளது.



பக்தாத் சர்வதேச விமான நிலையத்தில் புனரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கர்கள்

ஆயினும், ஈராக் போரின்போது அமெரிக்க நிலைப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்த ரஷ்யா, ஜேர்மன், பிரான்ஸ் சீனா போன்ற நாடுகள் ஈராக் புனரமைப்பில் பங்கேற்பதை புதிய வரைவுத் திட்டம் கணிசமாக மட்டுப்படுத்தியுள்ளது.

ஈராக்கில் பெற்றோலியத் திட்டங்களில் பல கோடி டொலர்களை முதலீடு செய்துள்ள ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் இதனை ஏற்க மறுக்கின்றன. தமது முதலீடுகளைப் பாதுகாக்க ஈராக் புனரமைப்பில் ஐ.நாவின் பங்கு அதிகமிருக்கவேண்டுமென்றே அந்த நாடுகள் விரும்புகின்றன.

ஆனால் ஈராக்கின் பெற்றோலிய வளத்தை குறிவைத்துள்ள அமெரிக்கா இதற்கு ஒப்புக்கொள்ளுமா என்பது கேள்விக்குரியதாக உள்ளது. ஈராக்கில் அமெரிக்கா தலைமையில் புனரமைப்பு இடம்பெறுவதை ஐ.நா.பாதுகாப்புச்சபையில் நிரந்தர உறுப்புரிமை நாடுகளான ரஷ்யா, சீனா, பிரான்ஸ் ஆகியவை எதிர்க்கின்றன. இவற்றுக்கு 'வீட்டோ' எனப்படும் ரத்து அதிகாரமும் உள்ளது. ஆகவே, இத்திட்டவரைவை நிறைவேற்றுவதற்கு பாதுகாப்புச்சபையின் நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளின் ஆதரவை திரட்ட அமெரிக்கா முயற்சிக்கின்றது.

புதிய வரைவுத் திட்டத்தில் மறுசரமைக்கப்பட்ட சில விடயங்கள் வருமாறு:-

ஈராக்கில் தங்கியுள்ள சக்திகளுடன் - அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளுடன் - ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதி இணைந்து செயற்படலாம்.

அதேசமயம் ஆயுதக்கண்காணிப்புத் திட்டம் குறித்து ஐ.நா. பரிசீலிக்கலாம். (ஆனால் ஆயுதக் கண்காணிப்பாளர்களை மீண்டும் ஈராக்குக்கு அனுப்புவது குறித்து விரைவில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.)

அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் அடுத்த 12மாத காலத்துக்கு ஈராக்கில் தங்கியிருப்பதெனவும் இக்கால எல்லை மேலும் நீடிக்கப்படலாம் என்றும் முன்னைய வரைவில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தற்போது மாற்றப்பட்டு, ஈராக்கில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரசொன்று ஈராக்கிய மக்களால் அமைக்கப்பட்டு, ஈராக்கின் பொறுப்பை அந்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளும் மட்டும் அமெரிக்க பிரிட்டிஷ் படைகள் ஈராக்கில் நிலைகொண்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் 'உணவுக்காக எண்ணெய்' திட்டத்தை ஈராக் 6 மாதங்களுக்குத் தொடரலாம் என்று புதிய வரைவு வரையறுக்கின்றது. முன்னர் இது 4 மாத காலமாக இருந்தது. இந்தக்கால நீடிப்பு, 'உணவுக்காக எண்ணெய்' திட்டத்தின் கீழ் சதாமுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்திய ரஷ்யாவுக்கு சிறிது ஆறுதல் அளிக்கக்கூடும்.

ஈராக்கின் பெரும் கடன் சுமையை குறைப்பதில் பல தரப்புகளும் ஒத்துழைக்க வேண்டுமென புதிய வரைவு கூறுகிறது. இதனைக் காரணம் காட்டி ஈராக்குக்கு ரஷ்யா வழங்கிய கடன்களை திருப்பிச் செலுத்தத் தேவையற்ற நிலை உருவாகக் கூடுமென்று ரஷ்யா அஞ்சுகிறது. (ஒ)



ஈராக்கில் சதாம் ஹுசைனின் சிலை ஒன்று அகற்றப்படுகிறது

## அமெரிக்க எதிர்ப்பில் ஒன்றுபட்ட ஷியா மற்றும் சுனி முஸ்லிம்கள்

பக்தாத்,மே21

ஈராக்கில் நீண்டகாலமாகவே முரண்பாடு கொண்டுள்ள ஷியா மற்றும் சுனி பிரிவுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் தம்மிடையே உள்ள வேறுபாடுகளை ஒதுக்கித்தள்ளி விட்டு அமெரிக்கப் பிரசன்னத்தை எதிர்த்துப் பாரிய பேரணி ஒன்றை பக்தாத்தில் நடத்தியுள்ளனர்.

சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் பங்கேற்ற இப்பேரணி வடக்குப் பக்தாத்தில் உள்ள சுனி பிரிவினரின் மசூதியிலிருந்து ஆரம்பமானது. அது டைகிரீஸ் ஆற்றுப் பாலத்தைக் கடந்து மறுகரையிலிருந்த ஷியா பிரிவினரின் மசூதியைச் சென்றடைந்தது. போரின் பின்னர் ஈராக்கில் இடம்பெற்ற அமெரிக்க எதிர்ப்புப் பேரணிகளில் இது பெரிதெனக் கருதப்படுகிறது. இறைதூதர் முஹம்மது நபியின் பிறந்தநாள் ஊர்வலமெனக் கூறப்பட்ட போதிலும் அமெரிக்க எதிர்ப்புக் கோஷங்களே முற்று முழுதாக பேரணியில் ஒலித்தன. (ஒ)

## அல்கெய்டாவுக்கு புதிய தளபதி!

ஹொங்கொங்,மே21

சர்வதேசத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடனின் பாதுகாவலராக இருந்த சைஃப் அல்அடல் என்பவர் அல்கெய்டா அமைப்பின் புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அல் அடல் எகிப்தைச் சேர்ந்தவர். சர்வதேச தீவிரவாதிகளைப் பற்றி ஆராய்ந்து வரும் நிபுணர் ரோஹான் குணரத்ன இதைத் தெரிவித்துள்ளார்.

காலித் ஷேக் முஹம்மதுக்கு பதிலாக சைஃப் அல்அடல் நியமிக்கப்பட்டுள்ளார் என்றார் ரோஹன் குணரத்ன.

பின்லேடனை யாரும் கண்டுபிடிக்க முடியாதபடி நீண்டகாலமாகக் காப்பாற்றி வருகிறார் அல் அடல். அதனால் அவருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார் குணரத்ன. (ஒ)

## உலக அரங்கில்

### சீனாவில் பலத்த மழை; 40 பேர் உயிரிழப்பு!

பெய்ஜிங்,மே21

சீனாவின் தெற்கு மாகாணங்களான குவாங்டாங், ஹுனான் ஆகியவற்றில் பெய்துவரும் பலத்த மழை வெள்ளத்தில் சிக்கி 40 பேர் உயிரிழந்தனர். மேலும் 21 பேரைக் காணவில்லை என்று சீன வெள்ள தடுப்பு அதிகாரிகள் கூறினர்.

இந்த மாதத் தொடக்கத்திலிருந்து அந்தப் பகுதிகளில் தொடர்ந்து பெய்துவரும் மழையானது கடந்த சில நாள்களில் தீவிரமடைந்தது. அதனால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி குவாங்டாங் மாகாணத்தில் 15 பேரும் ஹுனான் மாகாணத்தில் 25 பேரும் இறந்தனர். பலத்த மழை தொடரும் என்று உள்ளூர் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. (ஒ)

### ஈராக்கிய நகரொன்றில்

## நீர்நிலைக்குள் ஹெலி வீழ்ந்து 4 அமெ. படையினர் உயிரிழப்பு!

ஈராக்கில் ஹெலிகொப்டர் ஒன்று நீர் நிலையில் வீழ்ந்ததில் அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த 4 வீரர்கள் உயிரிழந்தனர்.

பக்தாத்தின் தென்மேற்கே 110 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள கர்பாலா நகரருகே உள்ள நீர் நிலையிலேயே இந்தக் ஹெலிகொப்டர் வீழ்ந்து மூழ்கியது. ஹெலியில் பயணித்த அமெரிக்கப் படையினர் நால்வரும் நீரில் மூழ்கி இறந்துவிட்டதாக பென்டகன் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹெலி வீழ்ந்ததும் மீட்புப் பணிக்காகச் சென்ற அமெரிக்கப் படையினரில் ஒருவர் ஹெலியில் இருந்தவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டபோது அவரும் நீரில் மூழ்கி இறந்துவிட்டதாக உறுதிசெய்யப்படாத தகவல்கள் தெரிவித்தன. 'சி.எச்.46 சீநைட்' ரக ஹெலிகொப்டரே விபத்துக்குள்ளானது. இந்த விபத்துக்கு தரையிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதல் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆயினும் இதனை அமெரிக்க அதிகாரிகள் உறுதிசெய்ய மறுத்துவிட்டனர். முதல் கட்டத் தகவல்களே தற்போது கிடைத்துள்ளதாகவும் தமது பல கேள்விகளுக்கு விடை கிடைத்த பின்னரே ஹெலிகொப்டர் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதற்குக் காரணம் தெரியவரும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ)

## எவரெஸ்ட் சாதனையாளர் விடயத்தில் திடீர் சர்ச்சை!

காத்மண்டு,மே21

சர் எட்மண்ட் ஹிலாரி, டென்சிங் நார்கே ஆகியோர் உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனைப் படைத்து 50 ஆண்டுகள் ஆகின்றன.

இச்சாதனையைக் கொண்டாட உலகின் பல பாகங்களில் இருந்தும் வருகின்றனர். இந்நிலையில் உண்மையிலேயே எவரெஸ்ட் சிகரத்தை முதலில் அடைந்தது யார்? என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த மலை ஏறும் குழுவினர் 1924இல் எவரெஸ்ட் மலையில் ஏறினர். அவர்களில் ஜோர்ச் மல்லோரி, இர்வின் ஆகியோர், 8848மீற்றர் உயரமுள்ள எவரெஸ்ட் சிகரத்தை ஜூன் 8ஆம் திகதி அடைந்தனர். ஆனால் அவர்கள் திரும்பி வரவில்லை.

அவர்கள் எவரெஸ்ட் சிகரத்தை நெருங்கியதை வேறோர் இடத்தில் இருந்து பார்த்ததாக அக்குழுவில் இடம்பெற்ற மலை ஏறும் வீரர் கூறுகிறார். எனவே அவர்கள் இருவரும் முதலில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர்கள் என்ற பெருமையைப் பெற வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது. நியூஸிலாந்தைச் சேர்ந்த எட்மண்ட் ஹிலாரியும் நேபாளத்தைச் சேர்ந்த டென்சிங் நார்கேயும் 1953இல் முதன் முதலாக எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தமையே பதிவில் உள்ளது.

1999ஆம் ஆண்டு அமெரிக்க மலை ஏறும் வீரர் எரிக் சைமன்சன் எவரெஸ்டில் ஏறியபோது, 8150மீட்டர் உயரத்தில் ஜோர்ஜ் மல்லோரியின் உடலைக் கண்டுபிடித்தார். அந்த உடலுக்கு அருகே பிராணவாயுக் கொள்கலன் இருந்தது. அவரது உடலில் கட்டியிருந்த கயிறு அறுந்த நிலையில் இருந்தது. அவரது வலது கால் முறிந்திருந்தது. உயரத்திலிருந்து அவர் விழுந்து இறந்திருக்கலாம் என்று இதிலிருந்து தெரிகிறது.

அவருடன் சென்ற இர்வினின் உடலை 8272 மீட்டர் உயரத்தில் பார்த்ததாக சீன மலை ஏறும் வீரர் சூ ஜிங் கடந்த மாதம் கூறினார். இதனால், மல்லோரியும் இர்வினுமே முதலில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர்கள் என்று ஒரு தரப்பு வாதிட்டு வருகிறது.

## தமிழக முன்னாள் அமைச்சர் ஓட ஓட வெட்டிக் கொலை!

### மதுரை நகரில் நேற்றுச் சம்பவம்

தமிழகத்தின் மதுரை நகரில் நேற்றுக் காலை முன்னாள் அமைச்சர் ஒருவர் வெட்டிக்கொல்லப்பட்டார்.

தி.மு.க. முன்னாள் அமைச்சரும், தி.மு.க. முக்கிய நிர்வாகிகளில் ஒருவருமான தா.கிருஷ்ணன் என்பவரே கொல்லப்பட்டவராவார்.

நேற்றுக் காலை கே.கே.நகரில் உள்ள வண்டியூர் பூங்காவில் இவர் உடற்பயிற்சி செய்துவிட்டு 6.30 மணிக்கு வீடு திரும்பிக்கொண்டிருந்தார்.

வீட்டில் இருந்து 50அடி தூரத்தில் நடந்து வந்தபோது, ஒரு கார் வேகமாக அவர் அருகே வந்து நின்றது. காரில் இருந்து இறங்கியவர்கள் தா.கிருஷ்ணனை சரமாரியாக வெட்டினார்கள். உயிரைக் காப்பாற்ற தா.கிருஷ்ணன் ஓடினார்.


ஆனால், அந்த கும்பல் தா.கிருஷ்ணனை ஓட ஓட விரட்டி சரமாரியாக வெட்டியது. ரத்த வெள்ளத்தில் தா. கிருஷ்ணன் கீழே சாய்ந்தார். தலை, கழுத்து, மார்பு உட்பட 7இடங்களில் வெட்டு விழுந்தது. அவர் கீழே சாய்ந்ததும், காரில் வந்த மர்மக் கும்பல் தப்பி ஓடிவிட்டது.

இந்தக் காட்சியை நேரில் பார்த்த ஒருவர் கூச்சலிட்டார். இந்தச் சத்தத்தை கேட்டு பக்கத்து வீட்டுக்காரர்கள் ஓடி வந்தனர். தா.கிருஷ்ணனின் மகள் தேமாவும் ஓடி வந்தார். தேமா டாக்டர் என்பதால் தன் தந்தையின் நாடித் துடிப்பை பார்த்தார். அப்போது அவர் இறந்துவிட்டமை தெரிந்தது.

அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. தி.மு.க.தலைவர் கருணாநிதிக்கும், அவரது மகன் மு.க.ஸ்டாலினுக்கும் மிக நெருக்கமானவராக தா.கிருஷ்ணன் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# பேரழிவுக்குள்ளான தென்மராட்சி மீண்டும் வளம் பெறுவது எப்போது?

தென்மராட்சியிலிருந்து 2000ஆம் ஆண்டு யுத்த நடவடிக்கை காரணமாக இடம்பெற்ற இடப்பெயர்வின் மூன்றாம் ஆண்டு நினைவுதினம் நேற்றாகும். இந்த இடம்பெயர்வால் மக்கள் பட்ட துன்பம் சொல்லில் வடிக்க முடியாததாகும். இக்கால கட்டத்தில் உயிரிழந்தவர்கள் சுமார் 300



பேருக்கும் மேல் என வன்னி விவரங்கள் தெரிவிக்கின்றன. காயமடைந்தவர்கள் எண்ணிக்கை இறந்தவர்களின் தொகையினைவிட பல மடங்காகும்.

இக்கால கட்டத்தின் நினைவலைகள், நினைவு நாள்கள் தற்பொழுது தென்மராட்சியில் மீளக் குடியமர்ந்த வீடுகளில் நினைவு கூரப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இக்காலப் பகுதியில் தென்மராட்சிப் பிரதேசத்தில் போரின் வடுக்களால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் மூன்று ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில் இன்றும் மீளக் கட்டியெழுப்பப்படவில்லை.

இலங்கைத்தீவில் எப்பகுதியிலும இவ்வாறான யுத்த வடுக்கள் ஏற்பட்டதாக இல்லை. யுத்த நடவடிக்கைகளின் பின்னர் தென்மராட்சிக்கு விஜயங்களை மேற்கொண்டு பேரழிவுகளைப் பார்வையிட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் பலவாறாக வர்ணித்துள்ளார்கள். சாவகச்சேரி நகரம் ஜப்பான் நாட்டில் அணுகுண்டால் தகர்த்தழிக்கப்பட்ட ஹிரோசீமாவைப் போன்றுள்ளது எனவும் வர்ணிக்கப்பட்டது. இது கடும் போரின் தாக்கத்தைத் தெளிவுபடுத்தியுள்ளது.

யுத்த அழிவுகளால் தென்மராட்சியில் மட்டுவில் வடக்கு, கிழக்கு, தெற்கு கிராமங்கள் உட்பட கல்வயல், நுணாவில், சாவகச்சேரி, சரசாலை ஆகிய பகுதிகள் மிக மோசமாக அழிவுக்குள்ளாகின.

ஆலயங்கள், தேவாலயங்கள் அழிக்கப்பட்டன. வரலாற்றுச் சிறப்புப்பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயம், சாவகச்சேரி வாரிவனநாத சிவன் ஆலயம், சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை தேவாலயம் உட்பட பல ஆலயங்கள் சேதமடைந்தன.

தொடர்ச்சியாக மக்கள் குடியிருப்புக்களை நோக்கி பலத்த எறிகணை மற்றும் பல்குழல் தாக்குதல்கள் ஏவப்பட்டன. இதனால் இப்பகுதி மக்கள் உடுத்த உடையுடன் எவ்வித உடைமைகளையும் எடுக்க கால அவகாசம் இல்லாது பாதுகாப்பான இடத்தை நோக்கி நகர்ந்தனர்.

இக்கால கட்டத்தில் தமது நடக்க முடியாமல் இருந்த இரத்த உறவுகளைக் கூட கைவிட்ட நிலையில் இருதலைக் கொள்ளி எறும்பு போல மனச் சஞ்சலத்துடன் மக்கள் செல்ல நேரிட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் தென்மராட்சி மக்கள் தமது பிரதேசத்திற்கு மீளச் சென்று குடியமர அனுமதி கிடைத்துள்ளது.

ஆனால், அப்பகுதிகளில் புதைகப்பட்டிருந்த மிதிவெடிகள் மற்றும் பொறிவெடிகள், வெடிக்காத நிலையில் புதைந்து காணப்பட்ட ஷெல்கள போன்றவற்றால் பொதுமக்கள் அச்ச உணர்வுடன் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. பல இடங்களில் உயிர் மற்றும் உடல் சேதங்களும் ஏற்பட்டன. இந்நிலையில், அரசு மற்றும் தனியார் அமைப்புக்கள் ஆகியன ஆமை வேகத்திலேயே தமது செயற்பாடுகளைத் தொடருகின்றன.

அது மட்டுமல்லாமல், மீளக் குடியமர்ந்த மக்கள் தமது உறைவிடங்களை இழந்த நிலையில் அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின உதவிகளை எதிர்பார்த்து உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இடப்பெயர்வால் பெரும் பாதிப்பைச் சந்தித்தபோதும் அரச உத்தியோகத்தர்கள் போதிய உதவிகள் கிடைக்கப்பெறாத நிலையில் அல்லற்படுகின்றனர்.

**செய்திக்கட்டுரை**
**சாவகச்சேரி செய்தியாளர்**

அது மட்டுமன்றி, தென்மராட்சியின தெற்குப் பகுதியான தனங்கிளப்பு - மறவன்புலவு உள்ளிட்ட பகுதிகள், எழுதுமட்டுவாழ் பகுதியில் சில பகுதிகள் போன்றவை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்கள் மீளக் குடியமர அனுமதி மறுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் தென்மராட்சியின் தெற்குப் பகுதி வயல் சார்ந்த வளம் மிக்க பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இப்பகுதி மக்கள் தமக்கு வளமான வாழ்வு எப்பொழுது கிட்டும் என்ற மனப்பரிதவிப்புடன் காலத்தைக் கழித்து வாழ்கின்றனர். ★


சித்த மருத்துவர்களால்,
சித்தர்கள் கூறியபடி தயாரிக்கப்பட்ட,
☆ தலைமுடி உதிர்தல், தலையிடி, இளநரை போன்றவற்றிற்கான
- சுஜெ பொன்னாங்காணித் தைலம்
☆ பாலர் ரோகங்களுக்கான
- சுஜெ பாலர் கிரந்தி எண்ணெய்
என்பவற்றைப் பெற்றுக்கொள்ள:
சுஜெ சித்த மருத்துவ நிலையம்
83, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(18184)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ 08 - 12 - 1915

கண் நெகிழ 11 - 06 - 2001

**அமரர் பசுபதி சோமசுந்தரம்**

திதி : அபரபக்க சஷ்டி

ஈராண்டு கடந்ததையா ஈரவிழி காயவில்லை
ஆருயிர்த் துணையாய் அவனியில் எமக்கிருந்தாய்
பரிபூரணன் பாதத்தில் சாந்தி நீ பெற்றிடவே
பார்மிசை நினைநினைந்து மலர்தூவித் துதிக்கிறோம்.

நினை நினைந்துருகும்:
மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரர், பூட்டன்.

236, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(18197)

## 6ஆம் மாத நினைவஞ்சலி



மலர்வு 01 - 01 - 1981

உதிர்வு 22 - 11 - 2002

**செல்வி சி.சிவகுமாரி**

மாதங்கள் ஆறு அவசரமாய்க் கடந்தாலும்
மாண்டுவிட்டாய் என்று சொல்ல மனம் மறுக்குதம்மா!
யோசிக்க யோசிக்க நிமிடம் கடந்தாலும் உன்
சிரித்த முகத் தோற்றம் எம் நெஞ்சத்தைக் கடக்காது!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
உமது ஆத்மா இறைவனடி சேரப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

நீங்குவில்,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

(18182)

## வீதியைத் திருத்த கோரிக்கை

பண்டத்தரிப்பு - சண்டிலிப்பாய் பிரதானவீதி குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு உதவாத நிலையில் உள்ளது. இவ்வீதி சேதமடைந்து ஆங்காங்கே பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளதால் வாகனங்களில் செல்லும் பிரயாணிகளும் ஏனையோரும் சிரமமடைந்து வருகின்றனர். இவ்வீதியைப புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிவருகின்றனர். (ஒ135)

## மீளாய்வு பயிற்சி

சண்டிலிப்பாய்,மே21

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் போருட் நிறுவனத்தின் அனுசரணையுடன் சுகாதாரத் தொண்டர்களுக்கான மீளாய்வுப் பயிற்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. கடந்த ஆண்டில் போருட் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட சுகாதாரத் தொண்டர் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களுக்கே இந்த மீளாய்வு பயிற்சி நடைபெறவுள்ளது.(ஒ-135)

## செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,மே21

மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் திருகோணமலையில் எதிர்வரும் 23ஆம் மற்றும் 24 ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்த கல்வி அபிவிருத்தி, கல்வி முகாமைத்துவ செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளதாகவும்-

இச்செயலமர்வு எதிர் வரும் 27ஆம் மற்றும் 28 ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் -

மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ)

## சண்டிலிப்பாயில் கலாசார விழா

சண்டிலிப்பாய்,மே21

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் கலாசாரவிழா எதிர்வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுளளது. சனிக்கிழமை பிற்பகல் அமரர் கா.சந்திரராசா அரங்கில் உதவிப் பிரதேச செயலர் ச.செல்வராசா தலைமையில் நடைபெறும் விழாவில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொள்வார். முதல்நாள் நிகழ்வில் பரதநாட்டியம், குழுநடனம், வயலின் இசைநிகழ்ச்சி, பட்டிமன்றம், நாடகங்கள் ஆகியன இடம்பெறவுள்ளன. (ஒ-135)


**வட இந்தியத் திருத்தல யாத்திரையின் விசேஷமான இரண்டு தலங்களின் வரலாற்றுச் சிறப்பும் அதன் புனிதத் தன்மையும்**

**காசி**

இது இந்தியாவில் சென்னையிலிருந்து வடக்கே சுமார் 2000கி.மீ. தூரத்தில் உள்ளது. இவ்விடம் வடஇந்தியாவில் இருக்கும் ஒரு புனித ஆலயம். முத்தித்தலங்கள் ஏழினுள் காசியும் ஒன்றாகும். இதனை பனாரஸ் என்றும் வாரணாசி என்றும் அழைப்பார்கள். வாரணா என்ற ஆறும் ஆசி என்ற ஆறும் இங்கு கங்கையில் கலப்பதனால் வாரணாசி என்ற பெயர் வந்தது. இங்கு இறக்கும் பறவைகள், பசுக்கள், மனிதர்கள் முதலிய எல்லா உயிர்களுக்கும் இறைவன் அவற்றின் செவிகளில் தாரக மந்திரத்தை ஓதி அருள்கின்றார். இதன் காரணமாக அவை மறுபிறப்பின்றி முத்தியடைகின்றன என்பது ஐதீகம். மேலும் இங்கு 64 படித்துறைகள் உள்ளன. 64 ஸ்நான கட்டங்களிலும் ஒரே நாளில் நீராடுவது சிரமம். ஆகவே கடைசியில் உள்ள ஐந்து தீர்த்த கட்டங்கள் திரிலோசனேசுவரகாட், பிரஹலாதகாட், ராஜீகாட், கட்கவிநாயககாட், வருணாசங்கமகாட்- ஆகிய ஐந்து கட்டங்களில் முழுகுவது சிறப்புடையதாகும். காசி விஸ்வநாதர் 12 ஜோதிலிங்கங்களில் ஒன்றாகும். மேலும் காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கும் அன்னபூரணி ஆலயத்திற்கும் நடுவில் ஓர் ஆலமரம் உள்ளது. இதனை அட்சயவட்டம் என்று கூறுவர். இதனைத் தரிசிப்பது உத்தமம். மேலும் காளவைரவர், தண்டபாணி, பிந்துமாதவர், மிருத்யஞ்ஜயநாதர் முதலிய ஆலயங்களையும் தரிசிக்கலாம். மேலும் அரிச்சந்திரன், வீரபாகு என்பவனிடம் அடிமையாகி மயானத்தைக் காத்த இடமே அரிச்சந்திர கட்டம் எனப்படுகிறது. இங்கு இப்போதும் பிணங்கள் எரிக்கப்படுகின்றன. இங்கு பார்க்க, தரிசிக்க வேண்டிய பல இடங்களும் ஆலயங்களும் உள்ளன. இங்கு சுற்றிப்பார்ப்பதற்கு முன் பிண்டம் கொடுக்க வேண்டும். பிண்டம் கொடுத்த பின்பே புறப்பட வேண்டும். காசி செல்பவர்கள் சிறு செம்புகளில் சீல் வைத்து அடைத்த கங்கைத்தீர்த்தம் கிடைக்கும். அவற்றையும் அன்னபூரணி சிலைகள் பல அளவுகளில் இருக்கும். அவற்றையும் காளவைரவர் கோயிலில் காசிக்கயிறு; அதையும் வாங்கி வந்து உறவினர், நண்பர்களுக்கு (இந்த 3 பொருள்களையும் அதாவது காசித்தீர்த்தம், அன்னபூரணி சிலை, காசிக்கயிறு) கொடுக்கலாம். அன்னபூரணி விக்கிரகத்தை வாங்கி வந்து பூஜை அறையில் வைத்து சமையல் செய்வதற்கு முன் ஒவ்வொரு நாளும் சிறிது அளவு அரிசியை விக்கிரகத்தில் போட்டு விட்டு சமையல் தொடங்க வேண்டும் ஒரு கிழமையில் அந்த அரிசியை சமையலுக்கு எடுத்து விட்டு மீண்டும் அதேபோல் செய்துவர வேண்டும். அப்படிச் செய்து வந்தால் எப்பொழுதும் அன்னபூரணி இருக்கும் வீட்டில் உணவிற்குத் தட்டுப்பாடு வராது என்று கூறுகின்றனர். (அத்துடன் ஐதீகமும் கூட)

(சி-27622) அடுத்த வாரமும் தொடரும்.



சிவமயம்

**வட-இந்திய காசி பத்திநாத், கேதார்நாத், அமர்நாத் யாத்திரை**

பூரி புவனேஸ்வர், கோனராக், காசி, சாரணாத், கயா, புத்தகயா, கல்கத்தா, ஜெய்பூர், அலகாபாத் (திரிவேணி சங்கமம் கங்கா, ஜமுனா, சரஸ்வதி) அயோத்தி, மதுரா, ஹரித்துவார், ரிஷிகேஸ், பத்திரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, டெல்லி, ஆக்ரா (தாஜ்மஹால்), அமர்நாத், வைஸ்ணவிதேவி, சென்னை, இராமேஸ்வரம், திருச்செந்தூர், சுசீந்திரம், கன்னியாகுமரி, மதுரை, திருச்சி, சிதம்பரம். சென்னை 35 நாள்கள். ஆண்கள் 75 வயதிற்குள் - பெண்கள் 45 வயதிற்கு மேல் 70 வயதிற்குள் ஆரோக்கியமானவர்கள் மட்டும்.

விருப்பமுடையவர்கள் தங்கள் பாஸ்போட் பிரதி - 2, அடையாள அட்டை பிரதி - 2, அத்துடன் ரூபா 1000/= முற்பணம் செலுத்தி முன்பதிவு செய்துகொள்ளவும்.

இந்த யாத்திரைகள் 2000 ஆம் அண்டு காலமான என் மனைவியின் நினைவாக சேவை நலம்கொண்டு குறைந்த செலவில் நடத்தும் யாத்திரை.

மேலதிக விவரங்களுக்கு:
T.ஸ்ரீரெங்கநாதன், தொ.இல. 0777-680102
(25 பேர் மட்டுமே)

(C/27625)

**உதயன்**

# பேரினவாதச் சேற்றில் புதையும் கட்சிகள்

பேரினவாத ஜே.வி.பியும் பொதுமக்கள் ஐக்கிய முன்ன்ணியும் இணைந்து 'தேசிய முன்னணி' என்ற பெயரில் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது.

கடந்த ஞாயிறன்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பேச்சுகளில் இறுதி இணக்கம் எட்டப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகத் தமிழர்களுக்கு வழங்கப்படவேண்டிய அதிகாரப் பகிர்வு மட்டம் குறித்து ஓர் இணக்கநிலை எட்டுவதில் ஜே.வி.பிக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் இடையில் நிலவி வந்த கருத்து முரண்பாடே தேசிய முன்னணி உருவாவது இழுபடுவதற்குக் காரணமாக இருந்து வந்தது.

இன்று நாட்டின் முக்கிய பிரச்சினை இனப்பூசல் தான். நாட்டை உலுப்பிவரும் தேசியப் பிரச்சினைக்கு இந்த அடிப்படையில்தான் தீர்வு என்று திட்டவட்டமாக ஏதேனும் குறிப்பிடாமல், ஜே.வி.பியுடன் சேர்ந்து தேசிய மட்டத்தில் ஒரு 'தேசிய முன்னணியை' அமைக்க முடியுமா? அப்படி விவரம் குறிப்பிடாமல் ஸ்தாபிக்கப் படும் தேசிய முன்னணியை மக்கள் ஏற்பார்களா? அதிகாரப் பகிர்வு என்றாலே வேம்பாய்க் கசக்கும் ஜே.வி.பியுடன், அதிகாரப் பகிர்வு குறித்து திட்டவட்டமான இணக்கத்தைக் கண்டு, அதைப் பகிரங்கமாக அறிவிக்காமல், கூட்டுச் சேர்வது பொ.ஐ.முன்னணியையும், ஜே.வி.பி. போன்று பேரினவாதக் கட்சியாக மக்கள் மத்தியில் அடையாளம் காட்டாதா? - இத்தகைய அச்சங்கள் பொ.ஐ.முன்னணிக்கு இதுவரை காலமும் இருந்துவந்தன.

இதன் காரணமாகத்தான், அதிகாரப் பகிர்வு மட்டம் குறித்து ஏதேனும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரும்வரை ஜே.வி.பியுடன் கூட்டமைப்பு இறுதி செய்யப்படுவதை பொ.ஐ.மு. இழுத்தடித்து வந்தது.

"இனப்பிரச்சினைக்கு ஒரே தீர்வு அரசியல் பேச்சு மூலம் அதிகாரப் பகிர்வு காண்பதே. அதிகாரப் பகிர்வு தொடர்பாக பொ.ஐ.முன்னணிக்கு திட்டவட்டமான நிலைப்பாடு உள்ளது. அதற்கு இணங்கிவராத எந்தக் கட்சியுடனும் பொ.ஐ.முன்னணி கூட்டுச் சேராது" - என்று பொ.ஐ.முன்னணித் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க ஏற்கனவே அறிவித்திருந்தார்.

ஆனால், ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை எப்படியும் கவிழ்க்கவேண்டும் என்ற ஆசையும், எப்படியும் ஆட்சிக் கட்டில் ஏறிவிடவேண்டும் என்ற அவசரத்துடன் கூடிய அவாவும் இந்த நியாயங்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவைத்து விட்டு, ஜே.வி.பியுடன் விரைந்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முடிவுக்கு பொ.ஐ.முன்னணியைத் தள்ளிவிட்டன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அதிகாரப் பகிர்வு மட்டம் இதுதான் என்று எதையும் அடையாளப்படுத்தாமல் - அந்த விடயத்தையே கவனத்தில் எடுக்காமல் ஒதுக்கிவிட்டு - இரு தரப்பும் கூட்டுச் சேர முடிவு செய்துவிட்டன.

எதிர்கொள்ளக்கூடிய தேர்தலுக்கு முகம்கொள்வது எப்படி, பொது வேட்பாளர் பட்டியலில் இட ஒதுக்கீடு, பொதுவான தேர்தல் சின்னம் ஆகியவை குறித்துத்தான் பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இப்போது கவலை; சிரத்தை; பிரச்சினை எல்லாமே.

நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் சமாதான முயற்சிகள் இப்போது முன்னெடுக்கப்படுகின்றன. இப்பிரச்சினைக்கு அமைதி வழியில் முடிவுகாணும் கடைசிச் சந்தர்ப்பம் இது என்பதே பலரதும் கணிப்பு.

இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால், நாட்டைப் பேரழிவுக்குள் ஆழ்த்தக்கூடிய பெரும் போர் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தச் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அரசைக் கவிழ்ப்பதற்காக அமைதி வழியில் தீர்வு காண்பதை அடியோடு எதிர்க்கும் பேரினவாதக் கட்சியான ஜே.வி.பியுடன் கூட்டுச்சேரத் தயாராகி விட்டது பொ.ஐ.முன்னணி. அதுவும் அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான தனது அதிகாரப் பகிர்வு மட்டம் அல்லது அலகு அல்லது முறை இதுதான் என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்தாமலேயே அந்த அதிகாரப் பகிர்வுக்கு முழு எதிரிகளான ஜே.வி.பியினருடன் சேர்ந்து அது முன்னணி அமைக்கின்றது.

ஆக, பேரினவாதச் சேற்றுக்குள் புதைந்து கிடக்கும் ஜே.வி.பியைத் தழுவுவதன்மூலம் தன்னையும் அதற்குள் மூழ்கடிக்க பொ.ஐ.முன்னணி தயாராகி விட்டது என்பதுதான் அர்த்தம்.

அந்தச் சேற்றில் அவர்களுடன் சேர்ந்து தாங்களும் புதைவதா என்பதை சிங்கள மக்களும் தீர்மானிக்கவேண்டிய வேளை நெருங்குவதாகவே படுகின்றது.

# பிரதேச செயலக உப அலுவலகத்தை வல்வெட்டித்துறையில் மீள இயக்குக!

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

வடமராட்சி,மே21

வல்வெட்டித்துறையில் முன்னர் இயங்கி வந்த வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலகத்தின் உப அலுவலகத்தை மீண்டும் அப்பகுதியில் இயங்க வைக்குமாறு அப்பகுதி மககள் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னர் வல்வெட்டித்துறையில் இயங்கி வந்த உப அலுவலகம் யுத்த சூழ்நிலை காரணமாக மூடப்பட்டது. இதனால் வல்வெட்டித்துறை,தொண்டைமானாறு, பொலிகண்டி ஆகிய வல்வெட்டித்துறை நகரசபைப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய நீண்டநேரம் செலவு செய்து பருத்தித்துறைக்குச் சென்றுவர வேண்டியுள்ளது. போக்குவரத்துச் செலவு, நேர விரயம், அலைக்கழிவு ஆகியவற்றுக்கு உட்படுத் தவிக்கும் வல்வெட்டித்துறைப் பிரதேச மக்களின் வசதி கருதி வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் உபஅலுவலகத்தை வல்வெட்டித்துறையில் மீள இயங்கவைக்குமாறு கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-173)

## நாட்டு நடப்பு

### எங்கே இந்த இறைவன்

பட்டுடுத்து பூவும்சூடி பால்பழங்கள் ஏந்தியே
இட்டமுடன் தங்க நகை எல்லாம் ஒன்றாய் மாட்டியே
கட்டிய நற் கணவனோடு 'காரில்' செல்வது எங்கேயோ?
எட்ட உள்ள அம்மனுக்கு இவற்றைக்கொண்டு செல்கிறாய்
கிட்ட வந்து அழுது கெஞ்சிக் கேட்ட பிச்சைக்காரியை
ஒட்ட அடித்துத் துரத்திவிட்டு
இழுத்துக் கதவைப் பூட்டினாய்
முட்டாள் அந்த பிச்சைக்காரி - முத்துமாரி அம்மனாய்
கிட்ட வந்து எட்டிப்பார்க்க கேடு என்று விரட்டினாய்
எட்டச் சென்று அவளைக் காண
எண்ணுவது மடமையே
இட்டமுடன் ஏழைகட்கு இரங்கினால் - இறைவனும்
உன்னைக் கண்டு இரங்குவான்.

- விகடகவி

# யாழ்.நகர வீதிகளில் நடப்பட்டுள்ள தவறான பெயர்ப்பலகைகளை அகற்ற மாநகரசபை நடவடிக்கை

## உயர் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே21

யாழ். நகரின் வீதிகளில் நடப்பட்டுள்ள வீதிப் பெயர்ப் பலகைகளில் வீதிகளின் பெயர்கள் தவறாக எழுதப்பட்டவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

யாழ். மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள வீதிகளில் வீதிப் பெயர்ப் பலகைகளை நடுவதற்கு போதிய நிதிவசதி யாழ். மாநகரசபையிடம் இருக்கவில்லை. இந்நிலையில், இரு பிரபல தனியார் நிறுவனங்கள் வீதிப் பெயர்ப் பலகைகளை அமைப்பதற்கான அனுமதியையும் பொறுப்பையும் சபையிடமிருந்து பெற்றுக்கொண்டன.

அந்த வகையில், தனியார் நிறுவனமொன்று சிறு வீதிகளில் பெயர்ப் பலகைகளை நடும் பணியை ஏற்றுக்கொண்டது. அந் நிறுவனத்தால் நடப்பட்ட நூறு பெயர்ப் பலகைகளில் சுமார் 10 பலகைகளில் வீதிகளின் பெயர்கள் தவறாக உள்ளமை எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

தவறான வீதிப் பெயர்ப் பலகைகள். 'ஸ்ரிக்கர்' தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைத் திருத்தி அமைக்கும் பொறுப்பை குறித்த தனியார் நிறுவனத்திடமே எமது சபை கையளித்தது. அதற்காக 5 வார கால அவகாசமும் வழங்கப்பட்டிருந்தது. அக்கால அவகாசம் முடிந்த பின்னரும் அவ்வீதிப் பெயர்ப் பலகைகள் திருத்தி எழுதப்படவில்லை.

ஆகவே, அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எமது சபை ஆரம்பித்துள்ளது.

- இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார். (ஓ-...)

# அதிகரித்து வரும் குற்றச் செயல்களை அடியோடு தடுக்க தீவிர நடவடிக்கை!

## சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் உறுதி

யாழ்ப்பாணம்,மே21

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் குற்றச் செயல்களைத் தடுக்கும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக வடபிராந்திய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹெரல்ட் அன்ரனி தெரிவித்தார்.

நேற்றுக்காலை யாழ்.பொலீஸ் நிலையத்தில் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் யாழ்.பொலீஸ் நிலைய பொலீஸ் அத்தியட்சகர் ஹெக்ரர் தர்மசிறி, மானிப்பாய் - இளவாலை பகுதிகளுக்கான உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எஸ்.குலவர்த்தன ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. களவு, கொலை, பாலியல் வல்லுறவு, வழிப்பறிக் கொள்ளை போன்ற குற்றவியல் நடவடிக்கைகளுடன் கசிப்பு உற்பத்தி, சட்டவிரோத மணல் அகழ்வு போன்ற செயற்பாடுகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இவற்றை முற்றாக ஒழிக்கும் வகையில் விசேட பொலீஸ் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது. சந்தைகள், ஆலயங்கள் போன்ற மக்கள் கூடும் இடங்களிலும் குற்றப்புலனாய்வுப் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் 24மணி நேரமும் பொலீஸார் ரோந்துப் பணிகளில் ஈடுபடுவர்.

ஏற்கனவே குற்றச்செயல்களில் ஈடுபட்டோரில் பலர் இனங் காணப்பட்டுள்ளனர். விரைவில் அவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுவர்.

போக்குவரத்தைப் பொறுத்தவரையில் பொலீஸார் இனி வருங்காலங்களில் எந்தவித நெகிழ்ச்சிப்போக்கையும் கடைப் பிடிக்கமாட்டார்கள். போக்குவரத்து விதிகளை நடைமுறைப் படுத்துவதில் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்குமாறு நீதிவான்கள் எமக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணிப்போர் 'தலைக்கவசம்' அணிய வேண்டியதும் வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் போன்ற ஆவணங்களை வைத்திருக்கவேண்டியதும் அவசியமாகும். சைக்கிளில் செல்வோர் சமாந்தரமாகப் பயணிப்பதனை எவ்வகையிலும் அனுமதிககமுடியாததாகும். மேலும் கட்டுப்பாடற்ற வேகத்துடன் வாகனங்களைச் செலுத்துவோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்களும் அதற்கான கால அவகாசமும் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன. வீதி ஒழுங்குமுறைகளை கடுமையாக அமுல்படுத்துவதற்கு காரணம், பொதுமக்களினதும், பயணிகளினதும் பாதுகாப்பின் பொருட்டேயாகும்.

தென்பகுதியில் கண்டி, கம்பஹா பிரதேசங்களைப் போன்று யாழ்ப்பாணத்திலும் தற்போது குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இளைஞர்கள் சிலர் அசாதாரணமான முறையில் யுவதிகளுடன் சேஷ்டைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான இளைஞர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மற்றும் சிலர் குற்றச் செயல்களில் ஈடுபட்ட பின்னர், தாம் புலி உறுப்பினர்கள் எனக் கூறித் தப்பிக்கப் பார்க்கின்றனர். அவ்வாறானவர்கள் உண்மையில் புலி உறுப்பினர்களாக இருப்பதில்லை என்பதும் அறியப்பட்டுள்ளது. இவ்வாறான சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பொதுமக்கள் போதிய ஒத்துழைப்புத் தரவேண்டும்.

சகல பொலீஸ் நிலையங்களிலும் தமிழ் தெரிந்த பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனவே, பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை அங்கு இலகுவாக பதிவு செய்யலாம்.

- இவ்வாறு ஹெரல்ட் அன்ரனி தெரிவித்தார். (ஓ-9)

**நாளை**

வைகாசி 08
வியாழக்கிழமை
22.05.2003
திதி : ஸப்தமி
முன்னிரவு 11.16 வரை
நட்சத்திரம் : திருவோணம்
முற்பகல் 8.35 வரை
சுபநேரம் : 7.22 - 8.52
ராகுகாலம் :1.22 - 2.52
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

மோசமான தோல்வியைச் சந்திக்கும் துணிவுள்ளவர்களே பெரும் சாதனைகளை நிகழ்த்த முடியும்.

# யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அதிக நிதி ஒதுக்கித்தருமாறு துணைவேந்தர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே21

யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வி, நிர்வாக நடவடிக்கைகளுக்காக இவ்வாண்டு நிதி ஒதுக்கீட்டில் மேலும் 5கோடி ரூபாவை வழங்குமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக தகவல் தருகையில் அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வித் தரத்தையும் நிர்வாக அமைப்பையும் நவீன தரத்துக்குட்படுத்த வேண்டியுள்ளது. மாணவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மிக இறுக்கமாகப் பேண வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இதற்காக பாடத்திட்டங்கள் மாற்றியமைக்கப்படவேண்டும். மாணவர்களுக்குப் போதிய கற்றல் வாய்ப்பு வசதிகளை வழங்குவது இன்றியமையாதது.

ஏனைய பல்கலைக்கழக மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் அதே வாய்ப்பு வசதிகளை எமது மாணவர்களும் பெற்றுக் கொள்ளும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது அவசியமானதாகும். கல்விச் செயற்பாடுகளில் மட்டுமன்றி மருத்துவ வசதிகள், கல்விச் சுற்றுலா வாய்ப்புகள் போன்றனவும் திருப்திகரமான முறையில் எமது மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

சுமார் 7ஆயிரம் மாணவர்கள் வரையுள்ள யாழ்.பல்கலைக் கழகத்தில் ஒழுக்கக் கட்டுப்பாடு மிக இறுக்கமாகப் பேணப்படுகிறது. சில மாணவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் வழிப்படுத்தப்பட்டுள்ளனர் - இவ்வாறு பேராசிரியர் சு.மோகனதாஸ் கூறினார். (ஓ-9)

## சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்
## கேள்வி அறிவித்தல் திகதி மாற்றம்

13.05.2003ஆம் திகதி உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட கேள்வி அறிவித்தல் பின்வருமாறு திகதி மாற்றம் செய்யப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி
- 27.05.2003 நண்பகல் 12.00மணி வரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி
- 29.05.2003 நண்பகல் 12.00 மணி வரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:-
- 29.05.2003 பிற்பகல் 2.00 மணி

மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சாவகச்சேரி பிரதேச சபை,
தலைமையலுவலகம், கொடிகாமம்.
19.05.2003 (சி-27997)

கு.ந.பாலச்சந்திரன்
செயலாளர்
சாவகச்சேரி பிரதேச சபை.



## வெளிவந்து விட்டது

இலங்கையிலேயே கல்வியியல் செயல் நிலை ஆய்வு தொடர்பான முதலாவது நூல்

### கல்வியியலில் செயல் நிலை ஆய்வு
### ACTION RESEARCH IN EDUCATION

நிபுணத்துவ ஆலோசகர் - பேராசிரியர் சபா. ஜெயராசா
(கல்வியியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

இதழாசிரியர் - திரு. பா. தனபாலன்
(உப பீடாதிபதி, கல்வியும் தரமேம்பாடும்)
திரு. ப. இராஜேஸ்வரன்
(முதலாம் அணி, ஆசிரிய மாணவர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

கல்வி முதுமாணி (M.Ed.), கல்விமாணி (B.Ed.), பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கற்பித்தலில் தேசிய டிப்ளோமா ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள், அதிபர் ஏனைய உயர் கல்வி வாண்மைத்துவப் பயில்வுகளில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் பயனுள்ள நூல்

அச்சிட்டோர் - ஸ்மாட் பிறின்ட்ஸ்
717, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கை முழுவதற்குமான ஏக விநியோகஸ்தர்கள்:

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021-2222575
(18189)


## நெஞ்சங்கள் சுமக்கும்
## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணுலகில் 1941 - 06 - 25
விண்ணுலகில் 2003 - 04 - 21



### அமரர் சின்னத்துரை கிட்ணசாமி

எமதருமைத் தெய்வமே!
பண்புக்கோர் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அதிரிரில் தெய்வமாய்
இல்லத்தின் ஒளிவிளக்காய்
உறவினர்க்கு உயிராய்
ஊராருக்கு உதவியாளனாய்
விளங்கிய எம் தெய்வமே,
நீர் எங்குற்றீர் - நீர்
சென்ற பாதையை கூறாமல்
தனியே சென்றதேனோ?
எம் உயிர் உள்ளவரை - உம்
நினைவுகள் எம்மைவிட்டகலா!

இன்று (2003.05.21) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக் கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

அன்பு மனைவி - [illegible],
ஆருயிர் மகன் - [illegible] (சுவிஸ்).
(18177)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் முன்னாள் தலைவரும் இன்றைய,
நிர்வாக உறுப்பினருமான

### காசிப்பிள்ளை மயில்வாகனம்

அவர்களின் திடீர் அகால மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

உடுப்பிட்டி வடக்கு. (18173)
கணேசா சனசமூக நிலைய நிர்வாகத்தினர்.

## வலி.வடக்கில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வலி.வடக்கு, மே21

வலி.வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி ப.திலக நாயகம்போல் தலைமையில் இடம் பெறவுள்ளது. (ஓ-86)

## உளவள பயிற்சிநெறி

கடந்த காலப் போர்ச்சூழலினால் உளநெருக்கடிக்கும் மனப் பிறழ்வுக்கும் ஆளாகிய சிறார்களை கையாள்வதற்கான பயிற்சிகளை வழங்க ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் முன்வந்துள்ளது.

இப்பயிற்சிநெறி எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் சாந்திக உளவளத்துணை நிலையத்தில் இடம்பெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## இயற்கை முறையில் சினைப்படுத்த உதவித்திட்டம்

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் இயற்கை முறையில் பசுக்களை சினைப்படுத்த விரும்பும் பண்ணையாளர்களுக்கு நல்ல இன காளை மாடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வசதி குறைந்த பின்தங்கிய இடங்களிலுள்ள பண்ணையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் இந்தக் காளை மாடுகளைப் பெற முடியும் என்றும் -

இவற்றைப்பெற விரும்புவோர் தமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம் என்றும் -

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

பொல்ன்னறுவையிலுள்ள தேசிய கால்நடை அபிவிருத்தி சபை இதற்கான காளை மாடுகளை வழங்கவுள்ளது.

பின்தங்கிய பகுதிகளிலுள்ள பண்ணையாளர்கள் தங்கள் வசமுள்ள பசுமாடுகளின் எண்ணிக்கை, இனப் பெருக்கத்திற்கான சினைப்படுத்தலுக்கேற்ற பசுமாடுகளின் எண்ணிக்கை தம்வசமுள்ள காளை மாடுகளின் எண்ணிக்கை ஆகிய விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-135)

## வெள்ளப் பாதிப்புக்கு வெளிநாடுகள் உதவி நடவடிக்கை

கடந்த சில தினங்களாக தென் இலங்கையின் சில மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கும் வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ பல வெளிநாடுகள் முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உதவிப் பணிகளுக்கென நோர்வே அரசு 9 கோடி 50 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் பல நன்கொடைகளை வழங்குவதற்கு நோர்வே தீர்மானித்திருக்கின்றது என்று அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார்ஹெல்கிஸன் பிரதமர் ரணில விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - நிவாரணப் பொருள்கள் மற்றும் மீட்புப் பணிகளுக்குரிய ஹெலிகள் மற்றும் படகுகள் என்பவற்றை இந்திய அரசு வழங்கவுள்ளது. (ஓ-4)


### தேவை

இரும்புக் கேற், கிறில் வேலைகள் செய்வதில் அனுபவமும் திறமையும் உள்ள வெல்டர் மற்றும் வேலை பழக விரும்புவோர் தேவை.

தொடர்பு:-
"லிங்கோ"
வி.இராசலிங்கம்,
109, சட்டநாதர் வீதி,
நல்லூர். (18161)



### மரம் விற்பனைக்கு

நன்கு வளர்ந்த இத்திமரம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
47, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(18199)


## செம்பியன்பற்று புனித பிலிப் நேரியார் யாத்திரை ஸ்தல பெருவிழா - 2003



யாழ்.மறை மாவட்டத்தின் கிழக்குக் கரையோரமாகிய செம்பியன்பற்று யாத்திரஸ்தல பதியில் எழுந்தருளியிருக்கும் புனித பிலிப் நேரியார் இற்றைக்கு 150 வருடங்களுக்கு மேலாகப் பல கோடி புதுமைகள் புரிந்து வருகின்றார்.

இப்புனிதரின் திருவிழா வைகாசி மாதம் 17ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள்கள் நடைபெற்று, 25ஆம் திகதி மாலை நற்கருணை விழாவும், 26ஆம் திகதி காலை 7மணிக்கு யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம ஆண்டகையின் தலைமையில் பெருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சுரூபப் பவனியும், ஆசீர்வாதமும் இடம்பெறும்.

*குறிப்பு:* யாத்திரிகர்களின் பயண நன்மை கருதி யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்து முகமாலைக்கும் முகமாலையில் இருந்து செம்பியன்பற்று ஆலயம் வரைக்கும் போக்குவரத்துச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

செம்பியன்பற்று.
- பங்குத் தந்தையும்
பங்கு மக்களும்.
(17985)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 - 09 - 1947
மறைவு 05 - 06 - 1999



### அமரர் வல்லிபுரம் முருகையா

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், சிறைச்சாலை, யாழ்ப்பாணம்)

திதி: 21.05.2003

ஆண்டுகள் நான்கு ஆயிற்றோ அந்தோ நீர் எமைப்பிரிந்து
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்!

"ஆனந்தவாசம்"
மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.
மனைவி,பிள்ளைகள்,
(18167)

## மரண அறிவித்தல்கள்

### காசிப்பிள்ளை மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தையிட்டிப்புலம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் மயில்வாகனம் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வசாவிளான் காசிப்பிள்ளை - பூதாத்தைப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், கந்தையா மற்றும் சரவணமுத்து ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஓய்வுபெற்ற ஆசிரியை புஸ்பலீலாவதியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2003) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா.சரவணமுத்து
(சின்னமணி - ஓய்வுபெற்ற ஆசிரியர் - தம்பி)
(18205)

### செல்லையா கிரிதரன்

(மயூரன்)

பலாலி மத்தியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கிரிதரன் (மயூரன்) 19-05-2003 திங்கட்கிழமை ஜேர்மனியில் அகால மரணமானார்.

அன்னார் செல்லையா காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்பு மகனும ஸ்ரீஸ்கந்தராஜா, ஜெயச்சந்திரன், பவானி, வைகுந்தவாசன், காலஞ்சென்ற சாந்தினி மற்றும் ஜெயந்தினி, சுதர்சினி, றஜனி, சிவரூபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சோதிசொரூபலிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரதீபா, துஸ்யந்தி, மயூரதன், நிஷாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சர்மிளா, சுஜனி, செந்தூரன், நிரோஜினி ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தற்காலிக முகவரி:
கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.
(18203)
தகவல்:
சி.செல்லையா (தந்தை).

# தமிழர்களின் விடுதலையை அல்ல; அவர்களிடையே மோதலைத்தான் இந்தியா விரும்பிச் சதிசெய்தது!

## திருமலைக் கூட்டத்தில் ரெலோ முதல்வர் ஶ்ரீகாந்தா குற்றச்சாட்டு

திருகோணமலை,மே21

ஜே.வி.பி., சிஹல உறுமய, நு.ஆ.பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஈ.பி.டி.பி. முதலான கட்சிகள் இன்று சமாதான முன்னெடுப்புகளைக் குழப்ப முனைகின்றன. இவற்றிற்கு இந்தியாவின் ஆசீர்வாதம் நிறைய உண்டு. சில கட்சிகளுக்கு இந்தியாவின் உதவியும் கிடைக்கிறது. தமிழர்களின் விடுதலையை அல்ல; அவர்களின் ஒற்றுமை குலைந்து அவர்களிடையே மோதல் ஏற்படுவதைத்தான் இந்தியா விரும்பி அதற்கான சதி வேலைகளை நீண்ட காலமாகவே மேற்கொண்டு வருகிறது.

மேற்கண்டவாறு இந்தியா மீது கடுமையாகக் குற்றஞ்சாட்டினார் ரெலோ இயக்கத்தின் முதல்வரும் சட்டத்தரணியுமான ஶ்ரீகாந்தா.

வெலிக்கடைச் சிறைத் தியாகிகள் மற்றும் ரெலோ இயக்கத்தின் மறைந்த தலைவர் சிறீ சபாரத்தினம் ஆகியோரின் நினைவஞ்சலிக் கூட்டம் திருகோணமலை திறந்தவெளி அரங்கில் சமீபத்தில் நகர சபையின் முன்னாள் உப தலைவர் கா.லோகீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஶ்ரீகாந்தா பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது:-

### இராணுவ பலம் தேவை

சேர்பொன்னம்பலம் இராமநாதன், ஜீஜீபொன்னம்பலம், தந்தை செல்வநாயகம், அ.அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் தத்தமது வழிகளில் சாத்வீக முறையில் தமிழினத்தின் நியாயமான உரிமைகளைப் பெற முயன்றார்கள், முடியவில்லை. சிங்கள அரசுகளிடமிருந்து சாத்வீக முறையில் உரிமைகளைக் கேட்டுப் பெற இயலாது என்பதும் இராணுவ பலம் உள்ள தமிழ்த் தலைமையினால்தான் காரியம் சாதிக்கமுடியும் என்பதும் அனுபவ ரீதியாகக் கண்டறியப்பட்டது. எனவே, தமிழினத்தின் நலன் கருதி வேலுப்பிள்ளை பிரபாகரனின் கரங்களைப் பலப்படுத்த முன்வந்தோம்.

### துரோகிகள்

சாத்வீக, அஹிம்சைப் போராட்டங்களின் அர்த்தம் புரியாத சிங்கள அரசுகளோடு பேசவேண்டும் என்றால் இராணுவ பலம் பொருந்திய தமிழன் ஒருவன் வேண்டும். அவன் தம்பி பிரபா என்பதை நாம் உணர்ந்துகொண்டுதான் அவரின் விடுதலைப் போராட்டத்துக்குப் பின்னணியாக நின்று குரல்கொடுத்து வருகிறோம். தேவையேற்படின், முன்னணியாக நின்றும் செயற்படுவோம். எம்மக்களுக்கு கிடைக்கும் தீர்வு தனிநாடாக இருந்தால் என்ன? ஐக்கிய இலங்கைக்குள் தன்னக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சியாக இருந்தால் என்ன? எது கிடைக்க வேண்டும் என்றாலும் அதற்குப் பிரபாகரன் தேவை. இந்தக் கொள்கைக்கு மாறாக நடப்பவன் எவனாக இருந்தாலும் அவன் தமிழ் இனத்தின் துரோகி ஆவான்.

### இந்தியா முதுகில் குத்திவிட்டது

மறைந்த தலைவர் சிறீ சபாரத்தினம் உண்மையாக உழைத்ததுடன் இரண்டு விடயங்களில் மிகவும் உறுதி வாய்ந்தவராகக் காணப்பட்டார். ஒன்று தமிழ் இனத்தின் அனைத்துத் தரப்பினரையும் ஒற்றுமைப்படுத்தி செயற்படுத்தல், மற்றையது தமிழ் இனத்தின் அரசியல் அபிலாஷைகளை இந்தியாவின் உதவியுடன் வென்றெடுத்தல். இவற்றில் தமிழ் இனத்தின் ஒற்றுமை இன்று பெருமளவில் நிறைவேறிவிட்டது. ஆனால், நம்பியிருந்த



இந்தியாதான் முதுகில் குத்திவிட்டது.

சமாதானப் பேச்சுக்களில் ரணில் மீது எவ்வளவு விசுவாசம் கொள்வது என்பதைவிட தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றித்தான் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

### கூட்டணியினர்

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி வெளியிட்ட அறிக்கை, அவர் பேசிய பேச்சுகள் எல்லாம் தமிழினத்துக்கு தீங்கு ஏற்படுத்தக் கூடியவை என்பதைத் தெரிந்தும் தட்டிக்கேட்கக் கூடியவர்கள் பேசாமடந்தைகளாக இருக்கிறார்கள், அதன் மர்மம் புரியவில்லை.

தமிழ் மன்னர்கள் ஆண்ட மண்ணை தமிழர்கள் நாம் மீண்டும் ஆளவேண்டும். இந்தச் சிந்தனையன்றி, வரப்போகும் தேர்தல் பற்றிய சிந்தனை எம்மிடையே இருக்கக் கூடாது.

### கனவுகள் நனவாகும்

இங்கிருக்கும் அரசியல்வாதிகள் இனியும் எமது தாயக மண்ணைச் சிங்கள அரசுகளுக்கு தாரை வார்த்துக் கொடுக்கக்கூடாது. வழுவழுத்த உறவைவிட வைரம் பாய்ந்த பகை மேல். திருமலை மண் காப்பாற்றப்பட வேண்டும். அதில் விசுவாசம், சத்தியம் வேண்டும்; யதார்த்தமாகச் செயற்பட வேண்டும்.

இப்போது ம் இறுதிக் கட்டத்துக்கு வந்து ளாம். இனிவரும் காலம் எமக்கு விடிவைப் பெற்றுத் தரும். இனித் தமிழன் ஓடப்போவதில்லை. உயிர்நீத்த அனைத்து ஆத்மாக்களின் கனவுகளும் நனவாகும் காலம் வெகுதூரத்தில் இல்லை. - இவ்வாறு ஶ்ரீகாந்தா கூறினார்.

செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. பேசுகையில் கூறியதாவது:-

மறைந்த தலைவர் சிறீ சபாரத்தினம் எந்த நினைவை விட்டுச்சென்றார் என்பதை நாம் நினைவு கூருகின்றோம். எமக்கு இழைக்கப்பட்ட வடுக்களை உதறித் தள்ளிவிட்டு அரசியல் நீரோட்டத்துக்கு வந்துள்ளோம். எமது மக்களின் விடுதலைக்காகவே என்றும் வாழ்கின்றோம்.

நாடாளுமன்றத்தில் வெளிப்படையாகப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக எங்களிடமிருந்த ஆயுதங்கள் பறிக்கப்பட்டு நாம் நையப் புடைக்கப்பட்டோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து ஒரு வருடம் தாண்டியும் இன்னும் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் மக்களின் குடியிருப்புகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர வழியின்றி அவதிப்படுகிறார்கள். இன்னும் எத்தனையோ தடங்கல்கள் இருக்கின்றன. இன்றைய போரற்ற அமைதி நிலை இப்படியே தொடர்ந்து, அரசு இலாபம் சம்பாதிக்கத் திட்டம் போட்டுள்ளது என்றுதான் சொல்லவேண்டும்.

### அரசின் தப்புக் கணக்கு

ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுகள் நடந்துவிட்டன. பேச்சுகளில் இணக்கம் காணப்பட்ட பல விடயங்கள் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. புலிகளைச் சீண்டும் சம்பவங்கள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், படையினரின் புதிய சட்டதிட்டங்கள், கெடுபிடிகள் என்று மேலும் பிரச்சினைகள் வளர்கின்றன. இவற்றிற்கு முடிவுகட்டவே புலிகள் பேச்சில் இருந்து தற்காலிகமாக விலகிக்கொண்டனர்.

புலிகள் எப்படியும் போர் நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுவார்கள். அப்போது சர்வதேச சமூகம் புலிகளைக் கண்டித்து வெறுத்து ஒதுக்கும். அத்தருணத்தில் அவர்களை வென்றுவிடலாம் என்ற அரசின் கணக்குத் தப்பாகிவிட்டது.

### இந்தியாவுக்கு ஓடக்கூடாது

பாதுகாப்புப் படையினரும், தென்னிலங்கை அரசியல்வாதிகளும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களைச் சந்தேகக் கண் கொண்டே நோக்குகின்றனர். 'குழம்பட்டும் ஒரு கை பார்க்கிறோம்' என்னும் தோரணையில் நடக்கின்றனர். அரசு போரைத் திணித்தால் தமிழ்மக்கள் அனைவரும் ஒரு குடையின்கீழ் நின்று எதிர்க்கவேண்டும். இந்தியாவுக்கு தப்பியோடவோ, அகதிமுகாம்களுக்குச் சென்று அங்கே முடங்கிக் கிடக்கவோ முனையக்கூடாது.

ஒரு காலத்தில் இந்தியா தமிழ் மக்களுக்கு உதவி புரியும் என்று எண்ணியிருந்தோம். ஆனால், அது முதுகில் குத்திவிட்டது. அதுமட்டுமல்லாது யாழ்ப்பாணத்தில் பாலியல் பலாத்காரம் புரியும் படையினருக்கு கட்டடம் கட்டித்தரவும் முன்வந்துள்ளது.

இந்தியா எப்படி நடந்துகொண்டாலும் விடுதலை பெறும் இறுதிக் கட்டத்தில் நாம் இன்று நிற்கின்றோம் - இப்படி அடைக்கலநாதன் எம்.பி. கூறினார்.

எம்.கே.சிவாஜிலிங்கம் எம்.பி. இராஜகுகனேஸ்வரன் எம்.பி., தங்க வடிவேல் எம்.பி. மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்தின் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

(வ)

# சூடுபட்ட வேதனையில் இளைஞர்கள் பேசுவதற்கு முடியாமல் முனகினார்கள்!

## உடதலவின்ன படுகொலை வழக்கின் முக்கிய சாட்சி தெரிவிப்பு

சூடுபட்ட வேதனையில் இளைஞர்களின் முனகல் சத்தம் மட்டுமே கேட்டது. அவர்களால் பேச முடியவில்லை.

உடதலவின்ன படுகொலைகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணையின்போது தொடர்ந்து சாட்சியமளித்து வரும் முக்கிய சாட்சியான முஹம்மட மாலிக் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணையின்போது சாட்சி ஏழு எதிரிகளை அடையாளம் காட்டினார்.

விசாரணை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டு நீதிபதிகள், சட்டத்தரணிகள், சாட்சியமளித்து வரும் மாலிக் ஆகியோர் சம்பவத்துடன் தொடர்புடைய வானைப் பார்வையிட்டனர்.

வழக்கின் 2ஆம், 3ஆம், 5ஆம், 6ஆம், 8ஆம், 9ஆம் எதிரிகள் எவ்வாறு வானுக்குள் இருந்த இளைஞர்களைச் சுட்டனர் என சாட்சி விவரித்தார்.

ரிஸ்வான் என்பவரை 5ஆம் திகதி சுட்டார். சபாலி என்பவரை 6ஆம் எதிரி சுட்டார். நஸ்மி என்பவரைச் சுட்டவர் 9ஆம் எதிரியென்றும் 10ஆம் எதிரியே வானுக்குள் குண்டு வைத்தவர் எனவும் சாட்சி தெரிவித்தார்.

சாட்சி மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

சம்பவ இடத்திலிருந்து எதிரிகள் அனைவரும் சென்ற பின், நான் ஒரு வீட்டிற்குள் நுழைந்தேன். வீட்டிலிருந்தவர்கள் என்னைத் தூக்கி தெருவில் போட்டார்கள். சகிர், ரிஸ்வான் ஆகியோரை கண்டி வைத்தியசாலைக்கு கொண்டு செல்கின்றனர் எனவும் என்னையும் வரும்படியும் அழைத்தனர். நாம் கண்டி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டோம்.

கண்டி வைத்தியசாலையில் 29 நாள்கள் சிகிச்சை பெற்றோம்.

- இவ்வாறு சாட்சி தெரிவித்தார்.

அரச தரப்பில் ஆஜராயிருந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பாலிதே பொர்னாண்டோ, சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்கையில், இந்த சம்பவத்திற்குப் பின் உமது மனநிலை எப்படி இருந்தது எனக் கேட்டதற்கு சாட்சி மரண அவஸ்தையில் இருந்ததாகத் தெரிவித்தார்.

(ஒ)

# கண்நோய்க்கு தன்னிச்சையாக மருந்திடுவது ஆபத்தாகலாம்!

## மருத்துவ வட்டாரங்கள் எச்சரிக்கை

வலி.வடக்கு,மே21

குடாநாட்டில் வேகமாகப் பரவி வரும் கண்நோய்க்கு மருத்துவ ஆலோசனையின்றி தன்னிச்சையாக மருந்திடுதல் ஆபத்தை விளைவிக்கக் கூடுமென்று மருத்துவ வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் பரவலாக கண்நோய் பரவி வருகின்றது. கடந்த சில நாள்களாகப் பெய்த மழையும், அதற்கு முன்னர் நிலவிய கடும் வெப்பமும் இந்நோய் அதிகமாகப் பரவக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இந்நோய் பரவலாக யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றது. இந்நோய் குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு ஏற்படுமாக இருந்தால் குடும்பத்தில் உள்ள மற்றவர்களும் இந்நோயின் தொற்றுக்கு உள்ளாகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நாளாந்தம் அதிக நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காகச் செல்கின்றனர்.

இதேநேரம் ஒருசிலர் மருந்துக் கடைகளில் இதற்கான மருந்தைப் பெற்றுப் பயன்படுத்திவருவதாகவும்- தகுந்த மருத்துவ ஆலோசனையின்றி இவ்வாறு மருந்தைப் பயன்படுத்துவது பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம் என்றும் - மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-86)



உலக செஞ்சிலுவைத் தினத்தையொட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரிக் கிளையினர் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தை சிரமதானம் மூலம் சீர்செய்தனர்.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகன், சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன், செயலாளர் ப.குகவீரசிங்கம் ஆகியோருடன் சங்கத் தொண்டர்கள் சிரமதானத்தில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். *(படம் : தென்மராட்சி செய்தியாளர்)*

# உடதலவின்ன படுகொலை வழக்கின் எதிரிகளுக்குப் பிணை வழங்குவதா?

## உயர்நீதிமன்றில் சூடான விவாதம்!

உடதலவின்ன படுகொலை வழக்கின் எதிரிகளான முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை உட்பட 15 பேரின் சார்பிலும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுக்கள் நேற்றுமுன்தினம் 5 நதியரசர்கள் முன்னிலையில் ஆராயப்பட்டன.

பிரதம நீதியரசர் சரத் என்சில்வா, நீதியரசர்கள் பி.எதுசூரிய, எஸ்.எச்.யாப்பா, டீ.ஏ.என்.டி.சில்வா, டி.பி.வீரசூரிய ஆகியோர் முன்னிலையில் இந்த மனுக்களின் விசாரணை நடைபெற்றது.

எந்த அடிப்படையில் இந்தப் பிணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன எனப் பிரதம நீதியரசர் வினவியபோது, மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி டி.எஸ்.விஜயசிங்க, குற்றவியல் சட்டத்தின் 451ஆவது பிரிவின் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டது எனப் பதிலளித்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணி மேலும் தமது வாதத்தில் உயர் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தவெனத் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுக்களை நிராகரிக்க ட்ரயல் அட்பார் நீதிபதிகளுக்கு அதிகாரமும் கிடையாது எனத் தெரிவித்தார்.

நீதியரசர் எஸ்.எச்.யாப்பா இதற்குப் பதிலளிக்கையில், பிணை வழங்குவதற்குரிய பூரண அதிகாரம் 'ட்ரயல் அட்பார்' நீதிபதிகளுக்கே உண்டு எனத் தெரிவித்தார். பிரதம நீதியரசர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், சட்டம் என்பது நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு மட்டுமேயன்றி புத்தகங்களுக்கும், மாநாடுகளுக்கும் வரையறுக்கப்பட்டதல்ல எனக் கூறினார்.

அரச தரப்பில் ஆஜரான அரச சட்டவாதி சவீந்திர பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், இந்த வழக்கு விசாரணை மேல்நீதிமன்றத்தில் நடைபெறுகிறது. அதில் முக்கிய சாட்சி சாட்சியமளித்துக் கொண்டிருக்கையில், எதிரிகளுக்குப் பிணை வழங்க முடிவெடுப்பது உகந்ததல்ல எனத் தெரிவித்தார்.

மேல் நீதிமன்றத்தில் பிணை கோரித் தாக்கல் செய்த மனுக்களின் பிரதிகளையும் அவை நிராகரிக்கப்பட்டமை குறித்த ஆவணங்களையும் உயர்நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட பிரதம நீதியரசர், விசாரணையை எதிர்வரும் ஜுன் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வான் விற்பனைக்கு

நிஷான் வான் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நவநீதன், மணியகாரன் வளவு, மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (சி-27991)

## கார் விற்பனைக்கு

3ஸ்ரீ தொடர் இலக்கமுடைய ஒஸ்ரின் கேம்பிறிச் (பரினா) கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 346, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு. (18188)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima, Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (18200)

## தவறிவிட்டது

இளவாலை ம.அன்ரன் சேவியரின் தேசிய அடையாள அட்டை 742171434V, இ.அ.அ., சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் சிறுதொகைப் பணத்துடன் பேர்ஸ் பிரதான தபாலக வீதியில் 19-05-03 திங்கட்கிழமை தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 62/30, ம.அன்ரன் சேவியர், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (19193)

குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பழையைச் சேர்ந்த தம்பிமுத்து சிவரஞ்சன் என்பவரது விசேட அடையாள அட்டை (இல.0907016383) சாவகச்சேரி சந்தைக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சி.சின்னத்துரை, C/o அ.தம்பிமுத்து, மருதங்குளம் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி என்னும் முகவரிக்கு அனுப்பி உதவவும். (18198)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1975, ஆடி, பூரட்டாதி 4ஆம் பாதம், 12இல் செவ்வாய் 5′ 6″ உயரம் உடைய M.B.B.S. Doctorஇற்கு மெல்லிய தோற்றமுள்ள, அழகான மணப்பெண் தேவை. குடும்பவிவரம், ஜாதகத்துடன் தொடர்பு: வி.இல.1900, மே/பா உதயன். (18178)

## மணமகன் தேவை

கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த, 1959 இல் பிறந்த, மூல நட்சத்திர மணமகளுக்கு படித்த அரச/தனியார் தொழில் புரியும் மணமகன் தேவை. விள.இல.1898, மே.பா. உதயன். (18157)

## திருமண சேவை

1964, பூசம், செவ்வாய் 4, M.B.B.S. Doctor மணமகளுக்கு அரசதுறை அல்லது தனியார் துறையில் படித்த, பண்பான மணமகன் தேவை. தொடர்பு: துரைவிமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (18151)

## வகுப்புகள்

Computer Typing, தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கிலம், Ms.Office, Pagemaker, Corel-draw, Photoshop பகல் இரவு வகுப்புகள். தொடர்பு: 37(149), சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (18204)

## ஆள்கள் தேவை

**விடுதி ஒன்றிற்கு பராமரிக்கும் வேலையாள்கள் இருவர் உடனடியாகத் தேவை.**

தொடர்பு:-
இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (18217)

## நாய்களுக்கு தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை

சண்டிலிப்பாய்,மே21

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொது சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாக நாய்களுக்கு விசர்நோய் ஏற்படாது தடுப்பூசி மருந்து போடுவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்காக நோய்த் தடுப்பு மருந்துகள் இவ்வலுவலகத்திற்கு யாழ்.சுகாதார திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியத்தினால் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஓ-135)

## நிர்வாகசபை கூட்டுவதற்கு கால அவகாசம்

யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக நிர்வாக சபை, தனது வருடாந்த பொதுக்கூட்டத்தை நான்கு மாதங்களின் பின்னர் நடத்துவதற்கான அனுமதியை யாழ்சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகப் பொதுச்சபை வழங்கியுள்ளது.

யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் விசேட பொதுச் சபைக கூட்டம் யாழ்.மத்திய கல்லூரியில் தலைவர் ஜி.எஸ்.சாந்திகரன் தலைமையில் நடைபெற்றது.

கழகத்தின் இன்றைய நிலை தொடர்பாக நிர்வாக சபையினர் பொதுச் சபைக்கு விளக்கம் அளித்தபோது கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு அங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

தற்போதைய நிர்வாகசபை நீதிமன்ற வழக்கொன்றை எதிர்கொண்டிருப்பதால் அவ்விசாரணை முடிவடையும வரை பொதுக்கூட்டத்தை நடத்த முடியாமல் உள்ளதாகத் தெரிவித்தனா. இதைத் தொடர்ந்து மேற்கூறிய அனுமதியை பொதுசபை வழங்கியது. இக கூட்டத்தில் யாழ்.மத்தியகல்லூரி அதிபர் க.இராசதுரையும் கலந்து கொண்டார்.

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் வைகாசித் திங்கள் 8ஆம் நாள் (22.05.2003) வியாழக்கிழமை மு.ப. 10.12 மணிமுதல் 11.32 மணிவரையுள்ள சித்தயோகமும், திருவோண நட்சத்திரமும் சிங்க லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் | எமது சிரேஷ்ட புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **மங்களவேணன் (வேணன்)** | **யாழினி (யமுனா)** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு பெரியோர் ஆசியும் பெற்று நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய நிச்சயித்திருப்பதால், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| திரு.திருமதி க.மகேஸ்வரன் | திரு.திருமதி சோ.மகேந்திரன் |
| செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு. | செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு. |

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இரு வீட்டார் அழைப்பு (18207)

# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

## (மட்டுப்படுத்தப்பட்டது)

## பொதுச்சபை அங்கத்தவர்களுக்கு விசேட பொதுச்சபைக் கூட்டம்

மேற்படி வைத்தியசாலைச் சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 01.06.2003 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 9.30 மணிக்கு சங்கத் தலைவர் திரு. மா.இரத்தினசிங்கம் அவர்களின் தலைமையில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இக்கூட்டத்தில் மேற்படி கூட்டுறவு வைத்தியசாலையின் தற்போதைய நிலைமையை விரிவாக ஆராய்ந்து இவ்வைத்தியசாலையின் எதிர்காலம் பற்றி தீர்க்கமான முடிவு எடுக்கப்படும்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக பொதுச்சபை அங்கத்தவர்கள் பலரும் இடம்பெயர்ந்து இருப்பதனால் தனிப்பட்ட முறையில் அறிவித்தல் அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறோம்.

இக்கூட்டத்திற்கு மேற்படி கூட்டுறவு வைத்தியசாலை அங்கத்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

| | | |
|---|---|---|
| மா.இரத்தினசிங்கம் | | ஆ.கதிரமலைநாதன் |
| தலைவர் | | செயலாளர் |
| 19-05-2003 | (18212) | மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை. |

# வாடகைக்கு உண்டு

யாழ். நகரில் ஸ்ரீதர் தியேட்டருக்கு அண்மையில் 600 சதுர அடி கொண்ட விசாலமான மேல்மாடி வாடகைக்கு உண்டு. காரியாலயத்திற்கும் - தொண்டு நிறுவனங்களுக்கும் பாவிக்க உகந்த இடம்.

தொடர்புகளுக்கு:

**கோசி ரெஸ்ரோறன்ஸ்**

'மணியங்கட்டடம்' 15, சிறாம்பியடி - யாழ்ப்பாணம்.

போன் : 5899 (18213)

# ஓராண்டு நினைவஞ்சலி

| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 23 - 02 - 1947 |  | 21 - 05 - 2002 |

## அமரர் B.B.தியாகராசா

ஆண்டு ஒன்று ஆயினும்
ஆறவில்லை எம் துயரம்
எத்தனை உறவுகள் எமக்கிருப்பினும்
நித்தமும் அத்தான் என்றழைக்க
இவ்வுலகில் நீங்கள் இல்லையே!
உங்கள் இனிய நினைவுகள்
என்றும் எம் நெஞ்சத்தில் நிலைத்திருக்கும. (18206)

தகவல்:

| | |
|---|---|
| ஜெயபாலன் குடும்பத்தினர், | உம்பிரிவால் துயருறும்: |
| *மானிப்பாய் றோட்,* | மனைவி, பிள்ளைகள், |
| *உயரப்புலம், ஆனைக்கோட்டை.* | உற்றார், உறவினர்கள். |

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்

**இ.திருச்செல்வம்** அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி இராமலிங்கம் குஞ்சரம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

முதலாம் வருட மாணவர்கள்
சித்திரமும் வடிவமைப்பும்.

நுண்கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம். (18208)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராமலிங்கம் குஞ்சரம் (குஞ்சு)

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் தேனிப்புளியடி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கம் குஞ்சரம் நேற்று (20-05-2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேல்ராசா மற்றும் பரமேஸ்வரி, திருச்செல்வம் (சந்திரன் - யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-05-2003) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| தேனிப்புளியடி, | | தகவல்: |
| சண்டிலிப்பாய். | (18215) | இ.திருச்செல்வம் (சந்திரன்) |
| | | மகன |

## சின்னப்பு சுப்பிரமணியம் (அப்பப்பா)

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், சுகாதாரசேவைகள் அத்தியட்சகர் பணிமனை, யாழ்ப்பாணம்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மல்லாகம் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு சுப்பிரமணியம் நேற்று (20.05.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னப்பு தம்பதிகளின் அருமைப் புதல்வனும், சரஸ்வதியின் (அன்னம்மா) அன்புக் கணவரும் இரத்தினம் தம்பதிகளின் மருமகனும் ஜெகசோதி, கணேசலிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் க.தியாகராசா (உரிமையாளர், காமாட்சி கூல்பார், திருநெல்வேலி), ஜெகதீஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சரஸ்வதியம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சின்னத்துரை, கனகரத்னம், செல்லம்மா, மகேஸ்வரி, நாகரட்ணம், கனகசபாபதி (கனடா), யோகம்மா, இராசலிங்கம், கமலாதேவி, பத்மாவதி (ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் பொ.கந்தையா (உரிமையாளர், இராஜலட்சுமி ஸ்டோர்ஸ், நுவரெலியா), ஆ.இராமநாதன் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்), க.சி.தாமோதரம்பிள்ளை (முன்னாள் உரிமையாளர், தாமோதரா ஸ்டோர்ஸ், மன்னார்), ஆ.பஞ்சலிங்கம், ஆ.தியாகலிங்கம், மணிமேகலாதேவி, சிலோன்மணி ஆகியோரின் சகலரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், கனகரெட்ணம், தம்பிஜயா ஆகியோரின் மருமகனும் சேதுப்பிள்ளை, சின்னத்தங்கன், வி.யாழுப்பிள்ளை, தங்கம்மா ஆகியோரின் பெறாமகனும் சர்வேஸ்வரன் - ஊர்மிளா தம்பதிகள் (கனடா), ஸ்ரீஅனந்தன் (கொழும்பு), பதுமநிதி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரஜீவ் (கனடா), நிந்துஜா (கனடா) ஆகியோரின் பாட்டனும் ஜஸ்மினியின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2003) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| தாவடி வடக்கு, | | தகவல்: |
| கொக்குவில். | (18211) | க.தியாகராசா தம்பதிகள் |
| | | (மகள் - மருமகன்) |

# மின்னியல் கொடி



புதிய கண்டுபிடிப்புக்களில் சிறந்தவற்றை தேர்ந்து எடுக்கும் கண்காட்சி மற்றும் பந்தயம் ஜெனீவா நாட்டில் சமீபத்தில் நடந்தது. இந்தக் கண்காட்சியில் இடம்பெற்றிருந்த புதிய கண்டுபிடிப்புதான் இங்கே உள்ள படத்தில் காண்பது.

உதைபந்தாட்டப் போட்டியின் போது மைதானத்தின் இருபுறமும் கண்காணிப்பு பணியில் ஈடுபடும் எல்லைக் கோட்டு நடுவர்களுக்கு உதவும் வகையில் இந்த மின்னியல் கொடி தயாரிக்கப்பட்டுள்ளது.

எல்லைக்கோட்டை விட்டு பந்து வெளியே வரும்போது எல்லைக்கோட்டு நடுவர், அதை கண்டுபிடித்து தனது கையல் உள்ள கொடியை அசைத்து தெரியப்படுத்துவார். எல்லைக்கோட்டு நடுவரின் முடிவுகள் பல முறை சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளன. உலகக்கிண்ணப் போட்டி போன்ற சர்வதேச போட்டிகளில் கூட எல்லைக் கோட்டு நடுவரின் முடிவுகள் விமர்சனம் செய்யப்படுகின்றன. இந்தச் சிக்கலைத் தவிர்க்கவும், துல்லியமாக தவறுகளைக் கணிக்கவும் இந்த மின்னியல் கொடி பயன்படும்.

கணனி இணைப்பு உதவியுடன் இந்த மின்னியல் கொடி இயங்குகிறது. மைதானத்தில் ஆடும் வீரர்கள் யார் எல்லைக் கோட்டுக்கு வெளியே பந்தைக் தட்டி விடுகிறார்கள் என்பதைக் கணனி கமெராக்கள் படம் பிடித்தபடி இருக்கும். பந்து எல்லைக் கோட்டைத் தாண்டும் போது கணனி கருவி மின்னியல் கொடிக்கு சிக்னல் கொடுத்துவிடும். அதன்மூலம் தவறுகளை எல்லைக்கோட்டு நடுவரால் துல்லியமாக கணிக்கமுடியும். ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த லஸ்லோ மருஸ்சி என்பவர் இந்த மின்னியல் கொடியையும் அதனுடன் இணைத்து செயற்படும் கணனி மற்றும் மென்பொருள்களையும் உருவாக்கி இருக்கிறார். படத்தில் மின்னியல் கொடியுடன் லாஸ்லோ இருக்கும் காட்சியைக் காணலாம்.

# இதுவும் மின்மயம்



படக்கதைகள் நிறைந்த கொமிக்ஸ் புத்தகங்கள் படிக்கும் ஆர்வம் எல்லோருக்கும் உண்டு. இந்த கொமிக்ஸ் புத்தகங்கள் கூட இப்போது மின்னியல் மயமாகி இருக்கின்றன.

'சிக்மாபுக்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த மின்னியல் புத்தகம் சிறிய பற்றரியில் இயக்க உதவுகிறது. வீடியோ கேம்ஸ் செயற்படுவது போன்ற தொழில் நுட்பத்தில் இந்த மின்னணுப் புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது. வீடியோ கேம்ஸ் பிளேயர் கருவியில் நாம் விரும்பும் விளையாட்டுக்கள் கொண்ட கஸட்டைப் போட்டுப் பார்ப்பது போல நாம் விரும்பும் கொமிக்ஸ் கதைகள் கொண்ட நினைவுத் தகடுகளை இந்த மின்னணுப் புத்தகத்தில் பொருத்திப் படிக்கலாம்.

ஜப்பான் நாட்டில் புகழ்பெற்ற மின் அணுப் பொருள்கள் தயாரிக்கும் நிறுவனமாக மட் சுசிதா இந்த மின் அணுப் புத்தகத்தைத் தயாரித்துள்ளது. மின் அணுப் புத்தகம் ஒன்றையும் அதில் பயன்படுத்தக்கூடிய கொமிக்ஸ் கதையின் நினைவுத் தகடு (ஸ்ராம் அளவில் உள்ளது) ஆகியவற்றையும் படத்தில் காணலாம்.

# அட! அப்படியா!!



## கதா'நாய்'கன்

அமெரிக்காவில் உள்ள டிராக் பல்கலைக்கழகத்தில் உள்ள நடகளா அணி புகழ் பெற்றதாகும். இந்தப் பல்கலைக்கழக விளையாட்டு அணியின் சின்னமாக இருக்க 'புலடாக்' ரக நாய்களில் சிறந்த நாய்த் தேர்வு சமீபத்தில் நடந்தது. இதற்காக நடந்த போட்டியில் உள்ளூர்களில் இருந்து ஏராளமான 'புலடாக்' ரக நாய்கள் கலந்து கொண்டன. உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் தங்களது நாய்களை அற்புதமாக அலங்கரித்துக்கொண்டு வந்திருந்தனர். ஏராளமான நாய்கள் கலந்துகொண்டதில் ஒலிவர் என்ற பெயர் கொண்ட 'புலடாக்' கதா'நாய்'கன் ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

'புலடாக்' ஒலிவர் டிராக் பல்கலைக்கழக விளையாட்டு அணியின் சின்னமாக இருக்கும். அத்தோடு ஒலிவர் படம் அணிந்த கொடியும் உருவாக்கப்படுகிறது.

3வயதான ஒலிவர் அழகிய மற்றும் சிறந்த நாயாக தேர்ந்து எடுக்கப்பட்டதோடு, அதற்கு அழகிய நாய்க்கான கிரீடமும் சூட்டி அழகு பார்த்தனர்.

# நீந்த முடியாத மீன்

மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை என்ற பழமொழியை அறிந்திருக்கலாம். ஆனால் நீந்த முடியாத ஒரு மீனும் இருக்கிறது.

அமெரிக்காவில் நியூயோர்க் பகுதியில் உள்ளது ஸ்கை போர்ட் நகரம். இங்கு உள்ள ஒரு ஹோட்டலில் வாடிக்கையாளர்களை கவர தங்க நிற மீன்கள் மற்றும் பல வண்ணங்களில் உள்ள அலங்கார மீன்கள் தொட்டிகளில் வளர்க்கப்படுகின்றன.

இங்குள்ள மீன்களில் ஒன்றுதான் டிக் எனப் பெயரிடப்பட்டுள்ள 17 வயது தங்கநிற மீன். நன்றாக நீந்திக் கொண்டும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டும் இருந்த இந்த மீனால் திடீரென்று நீந்த முடியவில்லை. தொட்டியின் அடிப்பகுதியில் கிடந்தபடி உடலை மட்டும் மெதுவாக அசைத்தபடி இருந்தது.

நன்றாக இருந்த மீன் திடீரென்று பாதிக்கப்பட்டதை அறிந்து ஹொட்டல் உரிமையாளர் ஷெர்மன் வேதனை அடைந்தார். அங்கு அடிக்கடி வரும் ஓர் இளம் பெண் இதை அறிந்து இந்த பிரச்சினையைத் தீர்க்க உதவ முன் வந்தார்.

மீன்களுக்கு ஏற்படும் நோய்கள் பற்றி ஆய்வு நடத்தும் ஆராய்ச்சியாளர் ஒருவருடன் தொடர்பு கொண்டு இதுபற்றி விசாரித்தார். அப்போது மனிதர்களுக்கு எப்படி பக்கவாத நோய் தாக்குதல் வருகின்றதோ அதுபோல மீன்களையும் நீந்த விடாமல் செயல் இழக்கச் செய்யும் நோய் தாக்கக்கூடும் என்று தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து தங்கநிற மீன் நீந்துவதற்கு ஊஞ்சல் போன்ற அமைப்பு பிளாஸ்ரிக் வயர்கள் மூலம் உருவாக்கப்பட்டது. அதில் தொங்கியபடி தண்ணீர் தொட்டியில் டிக் வசித்து வருகிறது. இதுதவிர வேகமைக்கப்பட்ட பட்டாணி மற்றும் சில மருந்துகளும் தங்கநிற மீனுக்கு கொடுக்கப்பட்டு வருகின்றன.



# இது கணனிதான்

தயாரிப்பு : கனிமொழி



இந்தப் பெண் தன் கைகளில் வைத்திருக்கும் பந்து வடிவிலான கண்ணாடியால் ஆக்கப்பட்ட பொருள் என்ன? இன்றைய யுகத்தில் ஒரு முக்கிய பொருள் அது. ஏகப்பட்ட மவுசு இருக்கிறது அதற்கு. ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இந்தப் பொருள் காட்சிப்படுத்தப்பட்டது. எதையாவது புதிதுபுதிதாகச் செய்தால்தான் இன்றைய சந்தையில் நிலைத்து நிற்க முடியும் என்பதைப் புரிந்துகொண்டு ஜப்பானின் ஹிட்டாச்சி நிறுவனம் அறிமுகப் படுத்தியுள்ள புதிய தனிப்பாவனைக் கணனிதான் (PC) அது. பந்து வடிவத்தில் இருக்கும் இந்தக் கணனி விரைவில் பாவனைக்கு வருகிறது.

# சப்பித் துப்பும் வெற்றிலை



1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெற்றிலை ஒன்று 10ரூபாவுக்கு மேல் கூட விலைகொடுத்து வாங்கியிருக்கின்றோம். ஆனால், அவ்வளவு விலைகொடுத்து வாங்கி, என்ன செய்தோம்? வாயில் போட்டு அரைத்துவிட்டு விரல் இடுக்கு வழியாக நீண்ட தூரத்துக்குத் துப்பி இருப்போம். என்றைக்காவது இந்த வெற்றிலையில் என்ன இருக்கின்றது என்று சிந்தித்தது உண்டா? ஆனால், வெற்றிலையைப் பற்றி விரிவாக ஆராய்ந்தவர்கள் அதில் என்னவெல்லாமோ விசேட அம்சங்கள் இருக்கின்றன என்கிறார்கள். உணவுச் சங்கிலியின் ஆரம்பத்தில் தாவரங்கள் உள்ளன. விலங்குகள் எல்லாம் நேரடியாக தாவரத்தையோ அல்லது தாவரங்களை உண்ணும் விலங்குகளையோ உண்டு அவற்றிலே தங்கியுள்ளன. தாவரங்களால் தமது உணவைத் தாமே தயாரித்துக் கொள்ள முடியும்.

சில தாவரங்கள் மருத்துவப் பண்புகள் கொண்டனவாகவும் இருக்கின்றன என்பது மேலும் சிறப்பு. இவற்றின் மருத்துவப் பண்புகளை ஆரம்பத்தில் அறிந்துகொள்வதற்கு முடியாதிருந்தது. ஆனாலும், அவற்றின் பண்புகளை எமது ரிசிகளும், ஞானிகளும் தமது அறிவினால் கண்டறிந்தனர். ஆய்வுகள் இல்லாததால் அவற்றை நிரூபித்துக்காட்ட முடியாதிருந்தது. இன்று, அநேக தாவரங்களில் காணப்படும் மணம் நறுமணப் பொருள்கள் தயாரிப்பிலும், வேறுவிதமான மணங்கள் நோய் காவிகளை அப்புறப்படுத்துவதிலும் உதவிபுரிகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது.

## புற்றுநோயைக் குணப்படுத்தும் இயல்பும் அதற்கு உண்டு

இலங்கை உட்படப் பல பூமத்திய ரேகையைச் சேர்ந்த நாடுகளில் அதிக அளவில் மருத்துவக் குணங்கள் நிறைந்த மூலிகைகள் காணப்படுகின்றன. இத்தாவரங்கள் பலவற்றில் நறுமணமும் அடங்கியுள்ளது.

பாரம்பரிய வைத்திய முறைகளாகிய ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யூனானி ஆகியவற்றின் மருத்துவ முறைகள் எல்லாம் இம் மூலிகைத் தாவரங்களை மையமாகக் கொண்டே காணப்படுகின்றன.

மேற்குநாட்டு "அலோபதிக்" வைத்திய முறைகளில்கூட இம் மூலிகைகள் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. ஆனால், இந்த வைத்திய முறையில் மூலிகைகள் மூலப் பொருள் இலகுவில் புரியாத அளவிற்குத் தூய்மையாக்கப்படுகின்றன.

மலேரியா நோய்க்கு பாவிக்கபடும் குயினைன் (Quinine) என்ற மருந்து கூட சின்கோனா (Cinchona) என்ற மரத்தின் பட்டையில் இருந்துதான் தயாரிக்கப்படுகின்றது. "மோபைன்" என்ற போதைப் பொருளை கஞ்சாச் செடியில் (Poppy) இருந்து பிரித்தெடுக்கப் படுகின்றது.

இம்மருத்துவ குணங்கள் அடங்கிய பொருள்களைப் பகுப்பாய்வு செய்தபோது அவற்றுள் அடங்கி இருந்த இரசாயன கட்டமைப்பும், முக்கிய இரசாயன பொருள்களும் தெரியவந்தன. இவற்றில் இருந்து பெற்ற தகவல்கள் செயற்கை முறையில் மருந்துகளைத் தயாரிப்பதற்கு பேருதவியாக அமைந்தன.



ஒபியம் செடி

பரந்த அளவில் இம்மூலிகைகளுக்கான தேவைகள் இவற்றை அதிக அளவில் பயிரிட வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. அதிகளவில் இந்த மூலிகைகளைப் பாவிக்க வேண்டி இருப்பதால், இவை அரிதாகிக் கொண்டே வந்தன. சில தாவர இனங்கள் இல்லாது அழிந்து போய்விட்டன. இதனால் இப்பயன்பட்ட மருத்துவ குணங்களும் நறுமணமும் கொண்ட தாவரங்களை அழிவில் இருந்து பாதுகாக்க ஒழுங்குகளைச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

தாய்லாந்தில் கடந்த பெப்ரவரி மாதத்தில் 'மனிதனின் நலனுக்கு பாவிக்கும், உலகில் உள்ள மருத்துவ குணங்கள் கொண்ட தாவரங்களுக்கான மாநாடு' நடத்தப்பட்டது. அம்மாநாட்டின் முக்கிய குறிக்கோள்களாக மருத்துவ குணமுள்ள தாவரங்களை ஆராய்ந்து அவற்றை வளர்ப்பதற்கு முயற்சி எடுத்தல், அவற்றைப் பாதுகாத்தல், உயர் தரமிக்கதாக மாற்றுதல் ஆகியன எடுத்துக்கொள்ளப் பட்டன.

**வி.ஜெயராஜ்**

தாவரங்களின் மருத்துவ குணங்களை மையமாகக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்துகள் சந்தைக்கு விற்பனைக்கு வரும் முன் அதன் தர நிர்ணய கட்டுப்பாட்டிற்கான சான்றிதழ் தேவைப்படுகின்றது. அத்துடன், தரம், பாதுகாப்பு ஆகியவற்றிற்கான தகவல்களும் வேண்டப்படுகின்றன.

இயற்கையில் கிடைக்கின்ற மூலிகைகளின் அபிவிருத்தி சங்கத் தலைவராக உள்ள டாக்டர் லக்ஷ்மி ஆரம்பவேலா, வெற்றி தொடர்பான கட்டுரை ஒன்றை அந்த

## ஒரு வலி நிவாரணி

மாநாட்டில் சமர்ப்பித்து இருந்தார். வெற்றிலை நஞ்சை நடுநிலைப்படுத்தும் சக்தியைக் கொண்டிருப்பதை ஆய்வுகளில் அவதானிக்கமுடிந்ததாக அவர் கூறி இருந்தார். நோவைக் குறைக்கும் (Pain Reducing) இயல்பும் வெற்றிலைக்கு இருப்பது தெரியவந்தது. இவற்றில் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு மேலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வெற்றிலை இலங்கை, இந்தியா, மலேசியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் பயிர் செய்யப்படுகின்றது. அதன் இலைமென்று தின்பதற்கே இங்கெல்லாம் அதிகம் பாவிக்கப்படுகின்றது.

ஆயுள்வேதத்தில் மருந்துப் பொருளாகவும் வெற்றிலை பயன்படுகிறது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## இறைச்சிக்கோழி (CULL BIRDS) விற்பனைக்கு உண்டு

அச்சுவேலி கோழிப்பண்ணையில் (Cull Birds) இறைச்சிக் கோழிகள் தொகையாக விற்பனைக்குண்டு. இவற்றைப் பெற விரும்புவோர் உடன் பிராந்திய கோழிப்பண்ணை அச்சுவேலியில் பெற்றுக்கொள்ளலாம். (C/28008)


## ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை வேலைகளுக்கான
# கேள்வி அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளரினால் பின் குறிப்பிடப் பட்டிருக்கும் வேலைகளுக்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் 05.06.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் '9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்த காரர்களிடமும், பொது ஸ்தாபனங்களிடமும் இருந்து கோரப் படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்தி அலுவல கத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக் கக் கூடியவர்களாக இருத்தல்வேண்டும்.
03. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து "செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை" இற்கு பதிவுத் தபால்மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டி யில் இட்டு இரண்டாவது பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்' அவர்களுக்கு 06.06.2003 நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
04. கேள்விகள் 06.06.2003ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுக மளிக்கலாம்.
05. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சபைக்கு உரிமையுண்டு.
06. மேலதிக விவரங்களை 'ஊர்காவற்றுறை' பிரதேச சபை அலு வலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | காரைநகர் சுப்பிரமணியம் வீதி புனரமைப்பு | 2500.00 | 250.00 |
| 02. | நாரந்தனை தெற்கு அண்ணா வீதி புனரமைப்பு | 2500.00 | 250.00 |
| 03. | நாரந்தனை கொக்குளா மண்டை ஒழுங்கை புனரமைப்பு | 3700.00 | 370.00 |

கு.கணேசலிங்கம்,
செயலாளர், தலைவருக்காக,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

ஊர்காவற்றுறை பிரதேச சபை.
ஊர்காவற்றுறை. (சி-28037)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 28 - 10 - 1969

மறைவு 21 - 04 - 2003

# இராசையா சதீஸ்குமார்

*திதி: 21-05-2003*

கடல் கடந்து சென்ற நீ-உன்
கற்பனைகள் கலைய
காற்றோடு கலந்தது ஏன்?
மூன்று கோயில்களுக்குப் போட்ட மாலை
முகத்திரையில் விழுந்தது ஏன்? - உன்
முப்பத்து நான்காவது வயதில் - நாம்
முப்பத்தொன்று செய்யவா?

கடந்த 21.04.2003 அன்று காலமான இராசையா சதீஸ்குமாரினது அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (21.05.2003) புதன்கிழமை London இல் நடைபெறும்.

உன் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
உன் அப்பா: இராசையா, அம்மா: சகுந்தலாதேவி,
சகோதரி: ரஜித்தா, சகோதரன்: ரமேஸ்.

"வல்லிபுரம் வாசா"
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்:-
வை.இராசையா.

(18227)

# சப்பித் துப்பும்.....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி வெற்றிலையில் இருந்து எண்ணெய், நீர் மற்றும் 'எத்தனோலிக் எக்ராட்' என்னும் பதார்த்தம் என்ப வற்றை விஞ்ஞானிகள் பிரித்தெடுத்து அவற்றை விரிவாக ஆராய்ந்தனர். இந்தப் பொருள்கள் நஞ்சை நடுநிலை யாக மாற்றுவதில் எவ்வாறு இயங்கு கின்றன என்பதை அவர்கள் குறிப் பாக ஆராய்ந்தார்கள்.

இந்த ஆராய்ச்சியின் பயனாக நஞ்சை நடுநிலைப்படுத்துதல் மற்றும் புற்றுநோயைத் தடுப்பது ஆகியவற்றில் வெற்றிலை முக்கிய பங்கை வகிக்கின் றது என்பது தெரியவந்தது.

பச்சையாக உள்ள தேயிலையில் காணப்பட்ட நஞ்சை அகற்றும் இயல் பையே விஞ்ஞானிகள் ஆரம்பத்தில் ஆராய்ந்து பார்த்தார்கள். ஆனால், வெற்றிலையில் அதனிலும் கூடியதாக அந்தப் பண்பு காணப்பட்டது. வெற்றி யில் இருந்து பெறப்பட்ட 'எத்தோனிக் எக்ராட்' (Enthonolic Extract) மிகக்கூடிய அளவில் நஞ்சை நடு நிலைப்படுத்தும் இயல்பைக் கொண் டது என்று கண்டறிந்தார்கள்.

வெற்றிலையில் இருந்து பெறப்பட்ட நீரை ஆராய்ந்து பார்த்த பொழுது, அதில் வலி உணர்வை அற்றுப்போகச் செய்யும் இயல்புகள் காணப்பட்டன. (AnalGesic Activity).

எலிகளுக்கு வலியை உண்டாக்கி அவற்றுக்கு வெற்றிலை நீரைக் கொடுத்து பரிசோதித்துப் பார்த்ததில் வலியை இல்லாது செய்யும் இயல்புகள் வெற்றிலையில் இருப்பது தெரியவந்தது.

இக்கண்டுபிடிப்புகள் மருந்து தயாரிப்பு சம்பந்தமான செயற்பாடுக ளில் வெற்றிலையின் பங்கை அறிந்து கொள்ள பெரிதும் உதவின.

டாக்டர் ராதிகா சமரசேகரா என் பவர் கைத்தொழில் சார்பான தொழில் சம்பந்தமான கழகத்தின் ஆராய்ச்சி யாளராகப் பணியாற்றுகின்றார். இவர் ஜப்பானில் மணம் பரப்பும் எண்ணெய் கள் (Essential Oils) நறுமணம் கொண்ட மூலிகைகளின் இரசாயன அமைப்பினை ஆராய்ந்தார். அதில் நுளம்பு கொல்லிகள் தொடர்பான கருத்துக்களையும் கண்டறிந்தார்.

நுளம்பால் பல நோய்கள் பரவு கின்றன. டெங்கு, யானைக்கால், மஞ் சள் காமாலை போன்ற நோய்களுக்கு நுளம்பே காரணமாக அமைகின்றது. இவை உஷ்ண வலய நாடுகளில் அதிகம் பாதிப்பை உண்டாக்கின்றன. இலங்கையும் ஒரு உஷ்ண வலய நாடாகத் திகழ்கிறது.

பல ஆண்டுகளாக இரசாயன நுளம்பு கொல்லிகளே பாவிக்கப்பட்டன. அநேகமான இரசாயன கொல்லிகள் மனிதனுக்கும், சூழலுக்கும் அதிக பாதிப்புகளைக் கொடுத்து வந்துள்ளன.

நோய்க்காவிகளாக உள்ள நுளம் புகள் காலப்போக்கில் நுளம்புக் கொல்லிகளுக்கு எதிராகத் தம்முள் இசை வாக்கம் அடைந்து எதிர்ப்பு சக்தியைப் (Resistance) பெறத்தொடங்கின.

இதனால் இம்மருந்துகள் சூழ லைப் பாதித்ததோடல்லாமல், நுளம்பு களையும் கொல்ல முடியாத நிலை யிலும் இருந்தன. எனவே, சூழலுக்கு பாதிப்பில்லாததும் சக்தி வாய்ந்தது மாகிய நுளம்பு கொல்லி தயாரிக்க வேண்டி ஏற்பட்டது.

நுளம்புகளைக் கொல்லும் ஆய்வில் பல புதிய தாவரங்களும் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. கறுவாப்பட்டை (Cinnamon), தேசிச்செடி ஆகியவற் றில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பொருள்களில் நுளம்பை அருகில் வரவிடாது எதிர்க்கும் இயல்புகள் தென்பட்டன. இவை பரந்த அளவில் வாசனைத் திரவியங்களையும் தயா ரிக்க முடியும் என்பதையும் அறிந்து கொண்டார்கள்.

எமது மூதாதையர்கள் இத்தகைய மூலிகைகளின் மருத்துவக் குணங் கள் குறித்து சிறப்பாக அறிந்து வைத்துள்ளனர். பெரும் சொத்தாக அவற்றை எமக்கு விட்டுச் சென்றுள் ளனர். ஆனால், நாம் எமது தான் தோன்றித் தனத்தாலும் அசண்டை யீனத்தாலும் இந்த அரிய பொக்கி ஷங்களைக் கைவிட்ட நிலையில் ஆங் கில மருந்துகளை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால், மேற்கு நாட்டவர்களோ எமது மூலிகைகளில் என்ன இருக்கின்றன என்று ஆராய்ந்து அவற்றைப் பயன்படுத்தும் உரிமைக ளைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.


சமுக சேவை உத்தியோகத்தர்
கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்
சனசமுக அபிவிருத்தி உத்தியோகத்தர்
ஆகிய பதவி ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சைக்கான வகுப்பு.

★பொது அறிவு

ஆசிரியர்:
+ தயேந்திரன் B.Com.
ஆரம்பம்: 24.05.2003
சனிக்கிழமை
மு.ப.11.30 (புதிய நேரம்)
அனுமதிகள் ஏற்கப்படுகின்றன.

பொன்ட் கல்வி நிலையம்
58, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(18226)

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
71, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(18224)


## சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்
## படவரைஞர்களைப் பதிவுசெய்தல்

2003ஆம் ஆண்டுக்கு சாவகச்சேரி பிரதேச சபையில் பட வரைஞர்களைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இதன் பிரகாரம் தகுதியுள்ளவர்கள் பின்வரும் சான்றிதழ்களுடன் தமது விண்ணப்பத்தை 10.06.2003 ஆம் திக திக்கு முன்பு *செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடி காமம்* எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றது.

1. படம் வரைஞர்களுக்கான பட்டப்படிப்பு சான்றிதழ்
2. அனுபவத்தை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ்

விண்ணப்பிப்பவர்கள் என்னால் கோரப்படும் திகதியில் குறித்த சான்றிதழ்களின் மூலப்பிரதியைச் சமர்ப்பித்து அனுமதி வழங்கப்படும பட்சத்தில் குறித்த கட்டணத்தைச் செலுத்திப் பதிவுசெய்து கொள்ளலா மென்பதையும் அறியத்தருகின்றேன்.

சாவகச்சேரி பிரதேச சபை,
தலைமையலுவலகம்,
கொடிகாமம்.
20.05.2003 (28009)

கு.ந.பாலச்சந்திரன்,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

## நாடக ஆற்றுகையூடான மிதிவெடி அபாயக்கல்வி செயற்பாட்டுக்கான இணைப்பாளர் தேவை

பின்வரும் தகுதி உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

★நாடகத்துறைசார்ந்த அனுபவம்
★ஆங்கிலத்தில் எழுதும், கதைக்கும் திறன்
★கணனி அறிவு
★மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கான அனுமதிப்பத்திரம்

| | | |
|---|---|---|
| மாதாந்த வேதனம் | - | 6000/= |
| வயதெல்லை | - | 35 வருடங்கள் |
| விண்ணப்ப முடிவு திகதி | - | 28-05-2003 |

விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (28010)


## D.சேனாதிராஜா அன் சன்ஸ்

கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்குமிடம், பல்கட்டுமிடம், மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்யுமிடம்.

★ கோல்ட் பிறேமுடன் பைபோர்கல் லென்ஸ் ரூபா 1000/-
★ மிதப்புப் பற்களுக்கான கிளிப் ரூபா 1000/-

மேலும் அனைத்தும் மிகக் குறைந்த விலைகளில்!
நாடுங்கள்:

இல. 18A, யாழ். பஸ் நிலையம்
(பஸ் நிலையத்தில் கிழக்குப் பக்கமாக உள்ள கடைகள் வரிசையில்)
யாழ்ப்பாணம்.
T.P. 071 338088
(18210)


## CEYLON MEDICAL COLLEGE COUNCIL
## PHARMACIST'S EXTERNAL EXAMINATION COURSE

20.05.2003 'உதயன்' நாளிதழில் வெளிவந்த விளம்பரத்துக்கு சில மேலதிக விளக்கங்கள்:

ஆகக்குறைந்த தகைமை : 1. G.C.E. O/L அல்லது
2. NCGE

1. அல்லது 3 தோற்றங்களில் சித்தி
2. விசேட சித்தி:
விஞ்ஞானம் அல்லது சுகாதாரம் அல்லது இரசாயனவியல் அல்லது பௌதிகவியல் அல்லது உயிரியல் -
ஏதாவது ஒரு பாடத்தில் G.C.E. O/L பரீட்சையில் பெற்றிருக்க வேண்டும்.
*(நேற்றைய விளம்பரத்தில் இது A/L என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது பொருத்தமற்றது)*
3. 'ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும்.

பயிற்சிக் காலம் ஒரு வருடம் (வாரத்தில் மூன்று நாள்கள்.)
பயிற்சி ஆரம்பமாகும் திகதி : 27-05-2003 செவ்வாய்க்கிழமை

தொடர்புகொள்ள: சாயீராம் பார்மஸி கல்வி.
இல. 57/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(18219)

## மரண அறிவித்தல்

### தோமஸ் பிரான்சிஸ்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தோமஸ் பிரான்சிஸ் நேற்று (20.05.2003), செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கஸ்பார் தோமஸ் ஆரோக்கியம் தின் அன்பு மகனும் திருமதி மரியம்மா பத்திநாதரின் அன்புச் சகோ தரனும் மோசஸ் பத்திநாதரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21-05-2003) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக கொழும்புத்துறை மாதா சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9/4, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (18223)

தகவல்:
பத்திநாதர்.

# யாழ்ப்பாண நிலைமை பற்றி அறிய ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி வருகிறார்

## டோக்கியோ மாநாட்டுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்

யாழ்ப்பாணம்,மே21

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அடுத்தமாதம் இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டுக்கு முன்னோடியாக யாழ். மாவட்ட நிலைமைகளை நேரில் ஆராய ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைப் பிரதிநிதி வவுட்டர் வில்ரன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

டோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளும் ஐரோப்பிய ஒன்றியக் குழுவுக்கு யாழ்.நிலைமை தொடர்பான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்காகவே அவர் இங்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் இரு தினங்கள் தங்கியிருக்கும் இவர், படையதிகாரிகள், அரச அதிகாரிகள், மனித உரிமைகள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின பிரதிநிதிகள், யாழ்.ஆயர் ஆகியோரைச சந்தித்துக் கலந்துரையாடுவார்.

சமாதான முயற்சிகள் மற்றும் புனர்வாழ்வு மீள்குடியமர்வு போன்ற விடயங்கள் தொடர்பாக அவர் கேட்டறிவார்.

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே21

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்துத் திணைக்களத் தலைவர்களையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்.சிவசுவாமி கேட்டுள்ளார்.

(ஒ-8)

## தமிழ்ச்செல்வனுடன் கூட்டமைப்பினர் நேற்று சந்திப்பு

கிளிநொச்சி,மே21

சமாதான முயற்சியில் தற்சமயம் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பாக தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரமுகரைக் கொண்ட குழு ஒன்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நேற்று கலந்துரையாடியது.

கிளிநொச்சியில் சமாதான செயலகத்தில் முற்பகல் 11.15 மணிக்கு ஆரம்பமான இக்கலந்துரையாடல் நண்பகல் 1.30 மணிவரை தொடர்ந்தது.

தமிழ்ச்செல்வனுடன் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் தங்கன், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், என்.ரவிராஜ், ஜி.ஜி.கஜேந்திரகுமார், ஜோசப் பரராஜசிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் பங்குபற்றினர்.

நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர்ஹெல்கிஸன் ஆகியோருடன் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை கூட்டமைப்பினர் தமிழ்ச்செல்வனிடம் எடுத்து விளக்கினர்.

(ம-3)

# தெதுறுஓயா, லுனுஓயாவிலிருந்து பெருந்தொகை தோட்டாக்கள் மீட்பு

கொழும்பு,மே21

சிலாபம், தெதுறு ஓயாவிலுள்ள லுனுஓயாவிலிருந்து பெருந்தொகையான தோட்டாக்கள் நேற்றுமுன்தினம் மாலை சிலாபம் பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

விமான எதிர்ப்பு தோட்டாக்கள் நான்கு, கைக்குண்டுகள் இரண்டு, ரி.56,ஏ.கே.47 துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் 15,000 என்பனவே லுனுஓயா ஆற்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

அந்த ஆற்றில் மீன் பிடிக்கச் சென்ற ஒரு மீனவரின் வலையில் தோட்டா ஒன்று சிக்கியதையடுத்து அந்த மீனவர் அது குறித்து சிலாபம் பொலீஸில தெரிவித்திருக்கிறார்.

லுனுஓயாவுக்கு விரைந்த பொலீஸ் குழுவினர் சுழியோடிகளின் உதவியுடன் தோட்டாக்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இராணுவத்தினர் பயன்படுத்தும் பச்சை நிற பொலித்தீன் உறையொன்றும் ஒரு ஜோடி மேஸ்களும் ஆற்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.


## வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

எமது சபையில் பதிவுசெய்யப்பட்ட இக்ராட் (ICTAD) எம் 7 உம், அதற்கு மேற்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் வேலைகளுக்கு கேள்விகள கோரப்படுகின்றன. கீழ்க் குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1) கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:-22.05.2003 - 29.05.2003வரை
2) கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 30.05.2003 நண்பகல் 12.00 மணிவரை
3) கேள்வி திறக்கப்படும் திகதி:- 30.05.2003 பி.ப. 2.00 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4) கேள்விகளை ஏற்கவோ/மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
5) கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபாலில் அல்லது தலைமைக் காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2 ஆம்பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | வற் வரி 20% |
| --- | --- | --- | --- |
| இளவாலை மாரீசன் கூடல் வீதி புனரமைப்பு | 14,000/- | 500/- | 100/- |

(பி.விக்டர்)
செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(C/28016)

## சாரதி தேவை

கைதடி கமநல சேவை நிலையத்திற்கு உழவு இயந்திர சாரதி ஒருவர் உடன் தேவை. சாரதிய அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 05.06.2003**

*விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:*
செயலாளர்,
கமநலநிலையம்,
கைதடி.

(28015)

## ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்
## இளம் பழைய மாணவருக்கான அறிவித்தல்

1980 – 2000 ஆம் ஆண்டுக் காலத்தில் கல்லூரியில் கல்வி கற்ற முன்னாள் மாணவருக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் 25.05.2003 இல் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பங்குபெற விரும்பும் நீங்கள் காலை 8.30 மணிக்கு தனித்தனியாக விளையாட்டு உப குழுவிடம் தங்களின் விருப்பினைப் பதிவுசெய்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.குழுக்கள் பிரிக்கப்பட்டு போட்டிகள் அதே நாளில் நடத்தி முடிக்கப்பட்டு வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும்.

பருத்தித்துறை. (C-28014) - செயற்குழு.

## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலையில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவனும் புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவருமான

**செல்வன் தியாகராஜா மயூரன்**

அவர்களின் அகாலமரணம் எமக்கு பேரதிர்ச்சியைத் தந்துள்ளது. அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.* (18234) -பாடசாலைச் சமூகம்.

## வலி.கிழக்கு பிரதேச சபை,நீர்வேலி
## ஏல விற்பனை

எமது சபையினால் 210 லீற்றர் வெட்டி நிமிர்த்தாத வெற்றுத் தார் பரல்கள் 28.05.2003 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு வலி.கிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ஏலத்திற்கு விடப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். சித்தி பெற்ற ஏலதாரர் பணத்தை உடனடியாகச் செலுத்தி பொருள்களை அன்றே அப்புறப்படுத்தல் வேண்டும்.

*வலி.கிழக்கு பிரதேச சபை,*
*தலைமை அலுவலகம்,நீர்வேலி,*
***19.05.2003***

(c/28013)

க.வெங்கடாசலம்
செயலாளர்.

## வேலையாள் தேவை

புடைவை வியாபாரத்தில் நல்ல அனுபவம் வாய்ந்த ஆண் விற்பனையாளர் தேவை.
உடன் நேரில் வரவும்.

**மிலேனியம் பெஷன் அன் பொம்பே பஸார்,**
10,11, பெரியகடை வீதி
(மலாயன் கபே முன்பாக),
யாழ்ப்பாணம்.

(சி.28011)

## நாகம்ஸ் சுன்னாகம்

இன்றுமுதல்
மாதவன். ஸ்நேகா சார்லி வையாபுரி நடித்த
**என்னவளே** (சினிமா)
இனிய பாடல்கள் நிறைந்த படம
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு விசேட காட்சி 7.00 (பு.நே)

## ராஜா யாழ்ப்பாணம்

இளையதளபதி விஜய், மீராஜஸ்மின்



**புதிய கீதை**

காட்சிகள் :10.30, 2.30, 6.30,
சனி, ஞாயிறு 9.30

(C/27626)

## லிபேட்டி அச்சுவேலி

விஜய், ரம்பா நடித்த



**என்றென்றும் காதல்** (சினிமா)

11.00, 3.00, 7.00 (பு.நே)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

ரஜனி,ரம்பா, சௌந்தர்யா நடித்த
**அருணாச்சலம்** (சினிமா)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
**CASTAWAY**

## லஷ்சுமி சினிமா (இணுவில்)

நடிகர் திலகம் சிவாஜிகணேசன், பத்மினி
மற்றும் பலர் நடிப்பில்
**தில்லானா மோகனாம்பாள்**
11.00, 3.00, 6.30 (பு.நேரம்)

(18148)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
12 - 10 - 1937



மறைவு
12 - 06 - 2001

**திருமதி பொன்னையா பாக்கியம்**

திதி-அபரபக்க ஷஷ்டி

தந்தை தாய் கணவர்க்கெல்லாம் சேவகி ஆனாய்
தனயர்தம் கடன்களும் தப்பாது முடித்தாய்
வந்திடுநல் விருந்தினரை நாளும் ஏற்பாய்
வஞ்சனையும் பொறாமையும் மருந்துக்குமில்லோய்
பந்தமென்றுள்ளார்படு துயரம் சகிக்காய்
பறந்தோடிப் பணி செய்யும் பண்பினை உள்ளாய்
புந்தியிலே அணுவளவும் பொய்யிலா வாழ்வோய்
போயோடி நாம் துடிக்க எங்கே பறந்தாய்?

- குடும்பத்தினர்.

*தற்காலிக முகவரி:-*
54/2A, சந்தனமாதா முன்வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (18230)

முகவரி :- *தம்பகாமம், பளை.*

# மரண அறிவித்தல்கள்

## ஜெயபாலன் ராஜ்குமார்

*(ஆசிரிய மாணவன், சித்திரப்பிரிவு, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி)*

அல்வாய் தெற்கு, மாலுசந்தியைச் சேர்ந்த ஜெயபாலன் ராஜ்குமார் நேற்று(20.5.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் து.ஜெயபாலன் - சரோஜா தம்பதியினரின் அன்புப் புதல்வன் ஆவார்.

அவரது இறுதிக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

மாலுசந்தி,
அல்வாய் தெற்கு. (C/28017)

தகவல்:
ப.ஸ்ரீதரன்
(மாமன்)

## வைத்தியாம்பிள்ளை அருளப்பு

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியாம்பிள்ளை அருளப்பு நேற்றுமுன்தினம் மாலை காலமானார்.

அன்னார் அருளப்பு இராசம்மாவின் அன்புக் கணவரும் அழகரட்ணம் (யாழ்.பல நோக்கு கூ. சங்கம்), நிற்குணானந்தன் (ஜேர்மனி), லீலாமலர், புஸ்பராணி, பேரின்பநாயகி, சகாயராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பேரின்பநாயகம் (கொழும்பு), உதயநாதன், அன்ரன் பேனாட், மகேந்திரம், திரேசா, பபி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.05.2003) புதன்கிழமை பிற்பகல் 4.00மணியளவில் புனித மிக்கேல் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித மிக்கேல் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (18233)

தகவல்:
சே.பேரின்பநாயகம்
(மருமகன்)

## சின்னத்துரை சிவலிங்கம்

புங்குடுதீவு 3ஆம் வட்டாரம் குறிகாட்டுவானைச் சேர்ந்த சின்னத்துரை சிவலிங்கம் 20.5.2003 இல் அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் தங்கம்மா அவர்களின் அன்பு மகனும் கிருபைராசா, விமலரஞ்சினியின் அன்பு மருமகனும் துஷ்யந்தினியின் அன்புக் கணவரும் சத்தியபாலன் கிருஸ்ணபாலன், அருணகிரிபாலன், கனகேஸ்வரி, கேதாரகௌரி, தவரஞ்சிதகௌரி, சிறிகௌரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கலாநிதி, அரியரெத்தினம், கமலாதேவி, பரிமளாதேவி,கணேசலிங்கம், சிறிகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22-05-2003) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் புங்குடுதீவு முனைப்புலம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு (18241)

தகவல்:
க.அரியரெத்தினம் (பாலன்)
(மைத்துனர்)

## வலி. வடக்கு மக்களின் போராட்டம்





வலி. வடக்குப் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி நேற்றுக் காலைமுதல் யாழ். செயலகம் முன்பாக ஆயிரக்கணக்கான மக்கள் கூடி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. செயலக வாயிலில் மக்கள் அமர்ந்திருந்து மறியலில் ஈடுபடுவதையும், கண்டிவீதியில் இடம்பெற்ற மறியலை அடுத்து இராணுவ பவள கவசவாகனம் ஒன்று திரும்பிச் செல்வதையும் பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டக்காரர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: தேவா)*

## திடீரெனக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிணைத்தவாறு நின்றனர்.

இதன்போது கண்டிவீதி வழியாக யாழ். செயலகத்தைக் கடந்து செல்ல முற்பட்ட இராணுவத்தினரின் இரண்டு 'பீல்ட் பைக்' மோட்டார் சைக்கிள்களும் பொதுமக்களால் இடைமறிக்கப்பட்டன.

பின்பு அவ்விடத்திற்கு 'பவள்' கவச வாகனத்தில் வந்த இராணுவத்தினர் வீதியை ஊடறுத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களுக்கூடாகப் பல வந்தமாகச் செல்ல முற்பட்டனர். எனினும், மக்கள் அதற்கு இடம் கொடுக்கவில்லை. இதனையடுத்து பவள் கவச வாகனத்தில் இருந்த இராணுவத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை வீடியோப்படம் பிடிக்க முற்பட்டனர். இதனால் பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டது. இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்குமிடையே கடுமையான வாக்கு வாதங்களும் இடம்பெற்றன.

பொதுமக்கள் எழுந்து நின்று பதாகைகளை அசைத்து இராணுவத்தினருக்குத் தமது எதிர்ப்பை வெளிக்காட்டினார்கள். இதனையடுத்து அங்கிருந்து சென்ற இராணுவத்தினர் சிறிது நேரத்தின் பின் மீண்டும் அங்கு வந்தனர். எனினும், அவர்கள் செல்வதற்கு மக்கள் இடமளிக்காமையால் மீண்டும் அவர்கள் அங்கிருந்து திரும்பிச் செல்ல வேண்டியேற்பட்டது. (ம-8-5-15-86)

## அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சியில் நடைபெறும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது நாளைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

வடக்கு - கிழக்கில் உடனடி மனிதாபிமான தேவைகளுக்கான உபகுழுவுக்கு (சிரானுக்கு) நிதி, நிர்வாக அதிகாரங்களையும் சட்ட அங்கீகாரத்தையும் வழங்கும் விதத்திலான சட்ட வரைபு ஒன்றையும் -

அந்த சட்ட வரைபை நிறைவேற்றுவது தொடர்பாகப் பிரதமரின் எழுத்துமூல உறுதி மொழியைத் தெரியப்படுத்தும் கடிதத்தின் நகலும் - கடந்த சனியன்று புலிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரும் அனுசரணைக் குழுவின் தலைவருமான விடர் ஹெல்கிஸன் இந்த யோசனைகள் அடங்கிய ஆவணங்களை கிளிநொச்சிக்கு எடுத்துச் சென்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் கையளித்திருந்தார்.

அந்த யோசனைகள் குறித்து புலிகளின் பதில் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. அது இன்று அரசுத்தரப்புக்கு அறிவிக்கப்படும் என்று தெரியவந்துள்ளது.

## 'பிக் அப்'....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

'பிக் அப்' மோதிய வேகத்தில் தூக்கி எறியப்பட்ட சிதம்பரநாதன் மண்டைபிளந்து அதிக இரத்தம் வெளியேறிய நிலையில் அந்த இடத்திலேயே மரணமானார். அவருடன் சிறுவன் ஒருவனும் அந்த சைக்கிளில் பயணித்துள்ளான். எனினும், தெய்வாதீனமாக அவன் எந்தவித காயமுமின்றித் தப்பித்துக்கொண்டான்.

உயிரிழந்த சிதம்பரநாதனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (ம-3-15-180)

## பயணிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பின் மரணமானார்.

இச்சம்பவத்தில் புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான கார்த்திகேசு முத்துலிங்கம் (வயது39), அவரது மகள் திருலங்கேஸ்வரன் கஜந்தினி (வயது21), 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பாலேந்திரராசசிங்கம் கேதீஸ்வரி (வயது41) அவரது மகனான பாலேந்திரராசசிங்கம் அசோக் (வயது18), 6ஆம வட்டாரத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சத்தியசீலன் (வயது 27), அவரது மகளான சத்தியசீலன் டன்சிகா (வயது 3), 7ஆம் வட்டாரத்தை சேர்ந்த சிவசுப்பிரமணியம் பராசக்தி (வயது47), 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தில்லைநாதன் சரஸ்வதி (வயது50), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எம்.சிவசுப்பிரமணியம் (வயது40), வான் சாரதியான முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவகுருவர்ணன் (வயது36) ஆகியோரே காயமடைந் தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த இருவரும் தடம்புரண்ட வானில் கீழ்ப்பகுதியில் சிக்கிக்கொண்டதனாலேயே உயிரிழக்கவேண்டி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வில்லுத்தகடு உடைந்ததால் கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ், பாதையை விட்டு விலகி குடைசாய்ந்ததாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (ம-3-15-188)

## 3 அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை அமைச்சர் அப்துல்காதரின் கொழும்பு இல்லத்தில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் பங்குபற்றினர். அவர்களின் ஆதரவாளர்களும் அக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

முஸ்லிம்களின் விவகாரத்தை இந்த அரசு இதுவரை சரியாகக் கையாளவில்லை என்று கூட்டத்தில் பங்குபற்றிய பலரும் கருத்து வெளியிட்டனர். அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் விதத்தில் நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவேண்டும் என்றும் அவர்கள் அழுத்தம் கொடுத்தனர். அதனடிப்படையில் இன்று முதல் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவது என்று பூர்வாங்க முடிவு எடுக்கப்பட்டது.

எனினும், இது குறித்து இன்று காலையில் கூடி முடிவை உறுதி செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டதாக அறிய வந்தது.

## ஆயிரக்கணக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கு போகக்கூடாது என வலியுறுத்தினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

வலி.வடக்கு மக்களாகிய எமது பிரச்சினையை அரசாங்கம் கண்டும் காணாதது போல் செயற்பட்டு வருகின்றது. எமது விடயத்தில் இதுவரை எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளவில்லை. தொடர்ச்சியான போராட்டங்கள் மூலம் நாம் களைப்படைந்து விட்டோம். எனினும், எமது போராட்டங்களுக்கான வெகுமதி இன்னும் எமக்கு கிடைக்கவில்லை.

எனவே, அரசு அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தும் வரை விடுதலைப்புலிகள் அரசுடனான சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றக்கூடாது.

நலன்புரி முகாம்களில் நாம் எதிர்நோக்கும் கஷ்டங்களை நேரில் வந்து பார்த்தால்தான் அதன் வேதனைகளைப் புரிந்துகொள்ள முடியும். கடந்த காலங்களில் எத்தனையோ அமைச்சர்கள், எம்.பிக்கள், அரச அதிகாரிகள் எமது நலன்புரி முகாம்களுக்கு விஜயம் செய்தனர். ஆனாலும் எமது நிலைமையை அவர்கள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. எனவேதான் நாம் இப்போது ஒரு முடிவை எடுத்துள்ளோம். எமது நலன்புரி நிலையங்களுக்குள் எந்தவோர் அமைச்சரோ, எம்பியோ, அரச அதிகாரிகளோ நுழையக்கூடாது என்பதுதான் அந்த முடிவு.

ஏனெனில், அதற்குள் நுழைந்தவர்கள் இதுவரை எமக்கு எதையும் பெற்றுத்தரவில்லை.

எமது பிரச்சினைகளை உரிய முறையில் தீர்க்காவிட்டால் - பேச்சுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்தாவிட்டால் - மீண்டும் ஒரு பேச்சு எமக்குத்தேவையில்லை.

போராடித்தான் எமது உரிமைகளை நாம் பெறவேண்டுமாயின் ஆயுதம் ஏந்திப்போராடவும் நாம் தயாராகவுள்ளோம் - என்றார். (ம-8-15-30-86)


**BARATHY**
சித்தன்கேணி
**SPOKEN ENGLISH**
**With Grammar**
*Lecturer By:*
**NISHANTHAN**
*(Dip.in English)*
புதிய பிரிவு ஆரம்பம்:
22.05.2003
வியாழன் 4.00p.m. (ப.நே.)
Note:- நீங்கள் ஆங்கில இலக்கணத்துடன் கற்பிக்க ஏற்ற இலகுவாகப் பேச, வாசிக்கமுறையில் Grammar உடன் அறிந்துகொள்ளலாம். (C/28001)

**பிறைற்றின் கல்வி நிலையம்**
சாவகச்சேரி
A/L எடுத்த மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புகள்
**SPOKEN ENGLISH**
With Grammar
NISHANTHAN
ஆரம்பம்:23.05.2003
வெள்ளி 3 p.m.
(18148)

**Internet browsing**
**@**
**Secote information technologies**
Palaly road, Thirunelvely
(near the Parameswara Junction)
யாழ்நகரில்
குறைந்த கட்டணத்தில் அனைத்து கணனிசார் சேவைகளையும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்.
அதிவேக PENTIUM 4 கணனி மூலம்
- இணையசேவை (Internet Browsing)
- 250/= பெறுமதியான இணைய அட்டை மூலம் 51/2 மணி நேரம் இணைய சேவை இந்த அட்டை வைத்திருப்போருக்கு மணி நேர E-MAIL, INTERNET பாவிப்பதற்கான அடிப்படை அறிமுகம் இலவசமாக வழங்கப்படும்.
- இன்ரநெற் போன் நிமிடத்திற்கு 10/= (கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள்)
- Computer printing - 1 Page - 10/=
- CD Writing 50/= ஆய்வுக் கட்டுரைகள், கடிதங்கள் என்பன சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும். (Computer type setting
- Floppy Disc, CD என்பன பெற்றுக்கொள்ளலாம்.
(18140)

**SUBRA** - சித்தன்கேணி
**ENGLISH**
With
Grammar
By:
**BRITTO**
புதிய பிரிவு
செவ்வாய், வியாழன்
காலை 7.00
**பேச்சு சிங்களம்**
லீலா கிருஷ்ணன்
செவ்வாய், வியாழன் 8.00 - 9.00
(C/27966)

எமது புதிய வீடியோ
CD வெளியீடு
ஷாம், விவேக்
நடித்த
☆ லேசா லேசா
CD, பிரதிகள் உடன் பெறலாம்.
அடுத்த வெளியீடு
☆ பார்த்திபன் கனவு
நிதர்ஷன் வீடியோ
மயிலங்காடு (18237)

**இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்**
இயற்கை மூலிகை சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல் பருமன், உடல மெலிவு, சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய்ப் பிரச்சினை. தலையிடி, வாதம், நாரி உளைவு, கைகால் விறைப்பு, தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாக குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.
ஆண்மைக்குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
**Dr.நவனீதன் DYNS. SMP. NC**
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
இல. 54 மணிக்கூட்டு வீதி,
யாழ்.பயனியர் வீடுதி
(வெலிங்ரன் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
யோகாசனப் பயிற்சி வகுப்புகளுக்கு பதிவுகள் நடைபெறுகின்றன.
முகாம் நடைபெறும் நாள்கள்:
மே 21ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை.
(18155)


## மரண அறிவித்தல்

### திருமதி கிறிஸ்தோப்பர் மாசில்லாமணி

(இளைப்பாறிய யாழ். தாதிய உத்தியோகத்தர்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறிஸ்தோப்பர் மாசில்லாமணி 2003-05-18 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பேதுறு கிறிஸ்தோப்பரின் அன்பு மனைவியும் பிரான்சிஸ் (கி.பி.அரவிந்தன்-பிரான்ஸ்), ஜோர்க் கிளமென்ற்(ஜெயா-பிரான்ஸ்), மரிய அல்போன்ஸ்(ரூபன்-நோர்வே), சகாயமேரி பப்ரிஸ்ற்(விஜிதா-பிரான்ஸ்), லூட்ஸ்மேரி கொன்சலா(வனிதா-ஜேர்மனி), ஜெறாட் ஜேம்ஸ்(ரவி-ஜேர்மனி), யூஜின் மேரி இமெல்டா(குமுதா-கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுமித்திரா(பிரான்ஸ்), மல்லிகா(பிரான்ஸ்), மரிய செல்வராணி(நோர்வே), யேசு றொபின்ஸன்(பிரான்ஸ்), சுரேஸ்(ஜேர்மனி), தேவவதனா(இலங்கை), றெஜினோல்ட்(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அங்கதன், மானினி, நயனி, ஜனனி, ஜெனி, ரிற்ரோ, ஷமீரா, நிலானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 158/2, பிரதான வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து 2003.05.24 சனிக்கிழமை அன்று பிற்பகல் 3.30மணியளவில் நல்லடக்கத்திற்காக புனித கொன்சேன்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

158/2, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(18238)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.